# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வரு மார்ச்சுமீ 24உ [ந. 241


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXLI.

## மாண்டேலயின் வீழ்ச்சி.

### லூயி மவுண்ட்பேடன் பிரபுவுக்கு மன்னர்பிரான் பாராட்டு.

தென்கிழக்கு ஆசியாவில் நடைபெற்ற சிரமசாத்தியமான நீண்டகாலப் போரில் நேசதேச விமானப்படை, பிரிடிஷ் கடற்படையின் ஆதரவுடன் தங்களுடைய கமாண்டுக்குட்பட்ட நேசதேச தரைப்படைகள் காட்டியுள்ள தீரத்தையும், உறுதியையும் நான் ஆச்சரியத்துடன் கவனித்து வந்திருக்கிறேன். தங்களுக்கும் தங்களுடைய கமாண்டுக்குட்பட்ட ஆபீஸர்களுக்கும், ஸோல்ஜர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## முன் ஏற்பாட்டின்படி பின் வாங்கியதல்ல.

### ரூண்ட்ஸ்டெட்டுக்கு ஏற்பட்ட மனித, தளவாட நஷ்டம்.

(மேஜர் ஜெனரல் ஸர் சார்லஸ் கிவின்).

வியப்புறத்தக்க நல்ல ஆரம்பத்திற்குப் பின்னும் ரோயர் நதியை படைகள் தாண்டிய பின்னும் ஈசன்ஹவரின் தாக்குதலின் பயனாக ரூண்ட்ஸ்டெட் ரைன்நதிக்குப்பின் வாபஸாகுவானென்றும் ஒரு வாரத்துக்குள் கொலோன் விழுந்து விடுமென்று ஒருவரும் எதிர் பார்த்திருக்கமாட்டார்கள். அது முன் ஏற்பாட்டின்படி ரூண்ட்ஸ்டெட்டின் படைகள் பின்வாங்கவில்லை என்பது நிச்சயம். படைகள் பூராவும் நிர்மூலமாகாமல் போனதற்கு வெசலிலுள்ள பாலமுனையை, எதிரி சாதுர்யத்துடனும் ஊக்கத்துடனும் காப்பாற்றியதுதான் காரணம். அதற்கு காலநிலை சௌகரியமாக இருந்து விமானப்படை நடவடிக்கையை பாதித்து விட்டது.

ஆகிலும் ரூண்ட்ஸ்டெட்டுக்கு ஏற்பட்ட நாசம் பூரணமாக இல்லாவிட்டாலும் இதிலிருந்து ரூண்ட்ஸ்டெட்டின் படைகள் மறுபடியும் உயிர்ப்பித்துவிடுமென்று எண்ணுவதற்குச்

சிறிதுகூட நம்பிக்கையில்லை. ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். எதிரிகளைத் தடைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடையும்பொழுதும் வெசலிலுள்ள முன்னேறும் வாசல் கைப்பற்றப்படும் பொழுதும் இந்தக் கணக்கு அதிகரித்துவிடும். மேலும் பிரிடிஷ் துருப்புகள் மிகுதியாக இருந்த கனடிய 1-வது சேனையின் போர்முனையில் கோரமாக நடைபெற்ற போரில் எதிரிக்கு ஏராளமான ஆட்சேதமும் ஏற்பட்டது. இதைவிட பலமான நஷ்டம் யாதெனில், அவனுடைய இருபடைகளுக்குமுள்ள தொடர்பு கெட்டுப் போய்விட்டது. ஏராளமான முஸ்திப்புகளை அவன் விட்டுவிட நேரிட்டது. அவனுடைய சிறந்த படைகளின் மனஉறுதி அழிந்தது.

எதிரியைத் திடுக்கிடும்படியாகச்செய்து வெள்ளப்பெருக்குள்ள ரோயர் நதியைத்தாண்டிய அமெரிக்கப்படைகளின் சாதுர்யமும், தீரமும், வேகமும் போற்றத்தக்கவை. எர்ப்ட் அரணை நொருக்கியும் கவசம் பூண்ட படைகளை தாக்கியும் நடைபெற்ற ஊடுருவிச் செல்லுதல் என்ற துணிவுகரமான நடவடிக்கை மூலம் வெற்றியை சம்பாதித்து விட்டோம்.

நார்மண்டிப் போரைப்போல இங்கும் நடவடிக்கைகள் துரிதமாகக் கையாளப்படுகின்றன. எயிபலில் பாட்டன் திடீரென்றும் சிறப்புடனும் ஊடுருவிச் சென்றதிலிருந்து அநேக விளைவுகள் ஏற்படக்கூடும். ஏனெனில் அவனுடைய படைகள் காப்ளன்ஸுக்கு வடக்கிலுள்ள ரைன் நதிக்கரையின் பெரும்பாகத்தை சுத்திசெய்து வருகின்றன. ஸார், பாலடினேட் பகுதிகளில் ஜெர்மனி நிலைத்து நிற்க முயன்றால், மோஸல் நதிக்கு வடக்கிலுள்ள ரைன் நதியின் குறுக்கே ஜெர்மன் படைகள் பின்வாங்கும்படி நேரிடும்.

144430

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 13—3—45 (செவ்வாய்க்கிழமை.) | இந்தியப் படைகள் பர்மாவில் மெயிமோவை ஆக்கிரமித்தன. |
| 14—3—45 (புதன்கிழமை). | அமெரிக்கர்கள் ஜெர்மனியில் ஹோனப்பைப் பிடித்தார்கள்.<br>அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த மற்றும் இரண்டு தீவுகளைக் கைப்பற்றினார்கள். |
| 15—3—45 (வியாழக்கிழமை). | ஜப்பானியர்கள் டோக்கியோவையும் மற்ற நகரங்களையும் காலி செய்தார்கள்.<br>பிரிடிஷ் படைகள் மாண்டலேயிலுள்ள முக்கிய ரயில்வே ஸ்டேஷனை அடைந்தன. |
| 16—3—45 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்கர்கள் கொலோன் பிராங்க்பர்ட் ரஸ்தாவைத் துணித்துவிட்டார்கள்.<br>ஐவோ ஜிமாப் போரில் நேசதேசத்தார்கள் வெற்றி பெற்றார்கள். |
| 17—3—45 (சனிக்கிழமை). | பிரிடிஷ் 14-வது சேனை மாண்டலேக்கு சமீபத்திலுள்ள சாகேயிங்கைப் பிடித்தது.<br>அமெரிக்க 3-வது சேனை ஜெர்மனியில் காப்ளென்சைப் பிடித்தது.<br>செம்படை கிழக்கு பிரஷ்யாவிலுள்ள பிராண்டன்பர்க்கை ஆக்கிரமித்தது. |
| 18—3—45 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்கர்கள் ஜெர்மனியிலுள்ள மெர்சிக்கைப் பிடித்தார்கள்.<br>அமெரிக்கர்கள் பாடாங்காஸ் விரிகுடாவில் டாலாகாவில் இறங்கினார்கள். |
| 19—3—45 (திங்கட்கிழமை). | அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸிலுள்ள பானேயில் இறங்கிவிட்டன. |
| 20—3—45 (செவ்வாய்க்கிழமை). | பிரிடிஷ் 14-வது சேனை மாண்டலேயைப் பிடித்தது. |

# (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

1. **அமெரிக்க 1-வது சேனை** கொலோன்—பிராங்பர்ட் ரஸ்தாவை இரண்டு இடங்களில் துணித்துவிட்டது. ரைன் நதிக் கரையிலுள்ள முன்னேறும் வாசலை 25 மைல் நீளத்துக்கும், 8 மைல்கள் அகலத்துக்கும் விஸ்தரித்துவிட்டது. காலன்பார்ன், கோனிக்ஸ்விண்டர், விட்டல்ஷலரஸ், ஸ்ட்ரோட், டிங்கல்பாக், ஸ்டாக்ஹௌஸன் முதலிய இடங்களைப் பிடித்தது அல்லது சுத்திசெய்தது.

சென்ற சனிக்கிழமையன்று நொருக்கப்பட்ட லூடண்டார்ப் பாலம் திரும்பி அமைக்கப் பட்டுவிட்டது.

2. **அமெரிக்க 3-வது சேனை** மெர்சிக்குக்கும் டிரியரு (டிரெவிஸ்)க்கும் மத்தியில் மோசல், நாகி நதிகளைத் தாண்டியபின் முன்னேறி, ரைன் நதியை அடைந்துவிட்டது. மோஸல் நதியிலுள்ள காப்ளென்சையும், நாகி, ரைன் நதிகள் சேருமிடத்திலுள்ள பிங்கனை யும், கிருனுக்கையும், ஸ்ப்ரெடிகெனையும், வோர்ம்ஸையும் பிடித்தது.

3. **அமெரிக்க 7-வது சேனை** சார் நதியை அடைந்து பிச்சி, ஹாகமான், சூர்பார்க், சார் பிரக்கன், ஸ்விபிரக்கனைப் பிடித்தது.

4. **அமெரிக்க 7-வது சேனையின்** வலது பார்ச்வத்தில் போர் புரிந்துவரும் பிரெஞ்சுப் படைகள், வடக்கு ஆல்ஸாஸிலுள்ள லாடன்பர்க் பிராந்தியத்தில் ஜெர்மனிக்குள் புகுந்து விட்டன. வடகிழக்கு பிரான்ஸ் பூராவும் சுத்தி செய்யப்பட்டுவிட்டது.

**கிழக்குப் போர்முனை.—**

1. **கோனிக்ஸ்பர்க் பகுதி.**—பிராண்டன்பர்க், ஷெலிநு, விண்ட்ஹீம், குருயன்வால்டி, லட்விக்சார்ட், பிரான்ஸ்பர்க் கைப்பற்றப்பட்டன.

2. **டான்சிக் பிராந்தியம்.**—ருஷ்யப் படைகள் டான்சிக்குக்குள் புகுந்துவிட்டன. மேரியன்பெல்ட் பிடிபட்டது.

3. **ஸ்டெட்டின் பிரதேசம்.**—கிரீபர்மாஹனும், ஆல்ட்டாமும் பிடிபட்டன. ஸ்டெட்டி னுக்குள் படைகள் நுழைந்துவிட்டன. ஸ்டெட்டினுக்கு வடகிழக்கிலுள்ள பால்டிக் துறைமுகமான கோல்பர்க் விழுந்துவிட்டது.

4. **பிரெஸ்லா பகுதி.**—படைகள் லோ நதியைத் தாண்டிவிட்டன.

5. **ஹங்கேரி.**—சைலீஷியா, போலந்து, செகோஸ்லாவேகியா சேருமிடத்தில் ராடிபார்-குரோட்கா பிராந்தியத்தில் ருஷ்யர்கள் புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள்.

**செக்கோஸ்லாவேகியா.**—ஹ்ரான் நதியிலுள்ள ஆல்ட்ஸோகல் விழுந்துவிட்டது.

**பஸிபிக்.—**

1. **ஸாலமன்ஸ்.**—போகன்வில்லியிலுள்ள படைகளைத் துடைப்பதற்காக படைகள் தீவிலிறங்கிவிட்டன.

2. **நியூ பிரிடன்.**—காஸல் தீபகற்பத்தில் போர் ஆரம்பித்துவிட்டது.

3. **பிலிப்பைன்ஸ்**—பானே, மாலானுன், பாம்பியன், சிமாராத் தீவுகளில் படைகள் இறங்கிவிட்டன. கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. லூஸானில் டாகாடான், இலாலோ விமான தளம், ஜானிலுவே, போடோடான், பாரோடாக், நியூவோ.

**ஐவோ ஜிமா.**—பூராவும் ஆக்கிரமிக்கப்பட்டது. போர் முடிந்துவிட்டது.

**ஜப்பான்.**—ஜப்பானுக்கருகில் நடைபெற்ற கடற்போரில் 475 ஜப்பானிய விமானங்கள் நஷ்டமாகின, 30 கப்பல்கள் பலமாகப் பழுதுபட்டன.

**பர்மா.**—மாண்டலே வீழ்ச்சி பெற்றது. நகரத்தின்பேரில் அமெரிக்க கொடி பறக்க விடப்பட்டது. இதற்குமுன் அமராபுரா பிடிக்கப்பட்டது.

மேற்கு ஆபிரிக்கப் படைகள் ஆகியாபுக்குத் தென்கிழக்கிலுள்ள லெட்மாக்கைப் பிடித்தன. சீனர்கள் லாஷியோவுக்குத் தென்மேற்கிலுள்ள ஸிபாவைப் பிடித்தார்கள்.

# சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**11—3—45** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—கிரபஸ் யுத்த தளவாட தொழிற்சாலை, சேனை யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள், கப்பல் கட்டுந்துறைகள்: எஸ்ஸன் (Essen).

சப்மரீன் கட்டும் தளங்கள்.—பிரமென் (Bremen), ஹாம்பர்க் (Hamburg), கீல் (Kiel).

எண்ணெ சுத்தி செய்யும் கிணறுகள்.—பிரமன் (Bremen), ஹாம்பர்க் (Hamburg).

ரயில்வே பாலம்.—டிராபர்க் (Drauberg) க்கும்

ரயில்வே.—லின்ஸ் (Linz), கிலாகன்பர்ட்டு (Klagenfurt)-க்குமிடையில்.

விமானச்சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும் (102 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இரவு.—பெர்லின (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

துருப்புகள், ஸ்டோர்கள்.—பின்மாஞ (Pyinmana).

பங்கர் நிலையங்கள்.—ஸகெய்ங் (Sagaing), பாகொக்கு (Pakokku).

துருப்பு முகாம்கள்.—ஷிபா (Hsipaw).

எதிரி தற்காப்புகள்.—மாண்டலேயிலுள்ள டப்பரின் (Dufferin) கோட்டை.

**12—3—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—போக்து வரத்துகள், தொழிற்சாலை ஸ்தலங்கள் :—டார்ட்மண்ட் (Dortmund).

கடற்படை ராணுவ இலக்குகள்.—ஸ்வின் மண்டி (Swinemunde) என்ற பால்டிக் துறைமுகம்.

எண்ணெ இலக்குகள்.—ஆஸ்திரியாவிலுள்ள வியன்ஞ (Vienna).

ரயில்வே பாலம்.-கிட்டல்பீல்ட் (Kittelfield).

விமானச்சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

தொழிற்சாலைகள் நிறைந்த முகாம்.—ஜப்பானிலுள்ள நாகோயா (Nagoya).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—பாஸிலா (Basilau) தீவு.

விமான நிலையங்கள்.—ஜோலோ (Jolo).

**பர்மா (Burma).**

ஜப்பானிய தற்காப்புகள்.—டப்பரின் (Dufferin) கோட்டை.

**13—3—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—போக்குவரத்துகள், தொழிற்சாலை இலக்குகள்—பிரெமன் (Bremen).

பீரங்கி இலக்குகள்.—ஹாலந்து (Holland).

ராணுவ இலக்குகள்.—ரீகன்ஸ்பர்க் (Regensburg).

ரயில்வே –ரீகன்ஸ்பர்க் (Regensburg) முதல் மியுனிச் (Munich).

போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).

விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—இந்தோசீஞ (Indio-China).

ரஸ்தாப் பாலங்கள்.—ஹஞய் (Hanoi), ஹெய்ப்ஹாங் (Haiphong).

தொழிற்சாலை தளங்கள்.–நகோயா (Nagoya).

**பர்மா (Burma).**

பாலங்கள்.—பர்மா (Burma), ஸியாம் (Siam) ரயில்வே.

ஸ்டோர் பிரதேசங்கள் –பியாபூ (Pyawbwe).

சேமிப்புகள் இதர இலக்குகள்.—அரக்கான் (Arakan).

**14—3—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—கவசம்பூண்ட வண்டிகள் நிலயங்கள்—ஹனோவர் (Hanover).

எண்ணெய் சுத்தி செய்யும் கிணறுகள்.—முஸ்பர்க் (Musburg), நெய்ன்ஹாகன் (Neinhagen).

நிலயங்கள்.—ஹில்டெஸ்ஷீம் (Hildesheim).

E-படகுகள்.—இஜ்முதின் (Ijmuiden).

ரயில்வே தளங்கள், பாலங்கள்.—ரூருக்குச் செல்லும் ரஸ்தாக்கள்.

பேன்சால் நிலயங்கள்.—ரூரில் உள்ள நகரங்களான பொகம் (Bochum), ரெக்லிங்ஷாசன் (Recklingshausen).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே தளங்கள்.—ஹங்கேரி (Hungary).

இரவு.—பெர்லின் (Berlin).

இலக்குகள்.—ஷவெய்பிரக்கன் (Zweibrucken), ஹாம்பர்க் (Homburg).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—பாங்கா (Bangkok).

**பர்மா (Burma).**

ஜப்பானிய ஸப்ளை பாதைகள் ஸ்டோர்கள்.—மாண்டலே (Mandalay), மெய்க்டில (Meiktila).

பாலங்கள்.—மாண்டலே (Mandalay), ரெங்கூன் (Rangoon) ரயில்வே.

15—3—45. (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ராணுவத் தொழிற்சாலை இலக்குகள்—பெர்லினுக்கு (Berlin) அருகில்.

பென்ஸால் நிலயங்கள்.—எஸ்ஸன் (Essen) காஸ்ட்ராப் ராக்ஸல் ((Castropräuxel.)

ரயில்வே பாலம்.—ஆர்ன்ஸ்பர்க் (Arnsburg).

எண்ணெய் சுத்தி செய்யும் இடங்கள்.—பெர்லினுக்கும் (Berlin), டிரஸ்டனுக்கும் (Dresden) இடையில் வியன்னவிற்கு அருகில், (Vienna).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

போக்கு வரத்துகள்.—வட இதாலி (N. Italy)

இரவு.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

ஜப்பானிய இலக்குகள்.—மாண்டலேயில் உள்ள டப்பரின் (Dufferin) கோட்டை.

ஸ்டோர்கள் துவியல்கள்.—கியாக்ஸ்ஸ் (Kyaukse).

துருப்புகள்.—ஷிபாவிற்கு தெற்கில் (Hsipaw)

16—3—45. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எதிரி ஸ்தாபனங்கள்.—ப்ளாரியாஸ்டார்ப் (Floriosdorf) ஸ்ச்செசாட் (Schwechat), கோர்னிபர்க் (Korneuburg).

ரயில்வே தளங்கள்.—ஆம்ஸ்டெட்டின் (Amstettin).

ரயில்வே லயன்கள்.—பிரென்னர் கணவாய் லயன்.

போக்கு வரத்துகள்.—ரூர் (Ruhr).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

தொழிற்சாலை ஸ்தலங்கள், போக்கு வரத்து ஸ்தலங்கள்.—நூரம்பர்க் (Nuremburg), வுர்ஸ்பர்க் (Wurzburg).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய கடற்படை.—மாட்ஸுவா (Matsuwa) தீவு.

பர்மா (Burma).

பாலங்கள்.—மாண்டலே (Mandalay), ரங்கூன் (Rangoon) ரயில்வே.

போக்கு வரத்துகள் துவியல்கள்.—அரக்கான் (Arakan).

17—3—45. (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—பென்ஸால் நிலயங்கள்.—ஹுல்ஸ் (Huls), டார்ட்மண்ட் (Dortmund) க்கு அருகில்.

துப்பாக்கி இலக்குகள்.—ஹாலந்து (Holland).

எண்ணெய் இலக்குகள், டாங்கி நிலயங்கள், ரயில் தளங்கள்.—ஜெர்மனி (Germany).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—போலன் (Bohlen).

டாங்கி தொழிற்சாலை.—ஹனோவர் (Hanover).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்யும் சேமிக்குமிடங்கள்.—மன்ஸ்டர் (Munster).

விமானச்சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ஜெர்மன் போக்குவரத்துகள்.—ஆஸ்திரியா (Austria).

பாலங்கள்.—பிரென்னர் கணவாய் (Brenner Pass) ரயில் லயன்கள்.

டான்ஸிக்.—(Danzig).

இரவு.—பேர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

ஸ்டோர் பிரதேசங்கள்.—ரெங்கூன் (Rangoon).

ஜப்பானியத் தற்காப்புகள்.—மாண்டலேயில் டப்பரின் (Dufferin) பிரதேசம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

12—3—45. (திங்கட்கிழமை).
to
16—3—45. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரியின் நடவடிக்கை இல்லை.

17—3—45 (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடன் (Britain) சில இடங்கள்.—வட இங்கிலாந்து (N. England).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி நடவடிக்கை இல்லை.

18—3—45. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

இலக்குகள்.—இங்கிலாந்தின் தென் கிழக்கு கரை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**நதிகளுக்கான போர்.** ஐரோப்பிய யுத்தம் இப்பொழுது ரைன், ஓடர், போ நதிக்கான போராக மாறிவிட்டது.

தேசங்களின் எல்லைச் சரகங்கள், பெரிய நதிகள், மலைத்தொடர்கள் அல்லது பொட்டல்கள் என்று நெப்போலியன் ஒரு சமயம் சொன்னான். படையெடுப்பவர்களுக்கு அவைகள் படிப்படியாக கஷ்ட சாத்தியமான இடையூறுகள் என்று அவன் சொன்னான். அவன் நாளில் பாலைவனம் மிகவும் சிரம சாத்தியமாக இருந்தது. லிபியன் பாலைவனத்தில் எதிரியைத் துரத்தியடிப்பது மூலமாக மாண்ட்காமரி இது தவறென்று ருஜுச்செய்துவிட்டான். மலைகளும் இடுக்கண்களில்லையென்று ஸிஸிலி நடவடிக்கையும், தெற்கு இத்தாலி நடவடிக்கையும் ருஜுச்செய்துவிட்டான். அடுத்தபடியாக சென், மாஸ், ரோயர், ரைன், ஒடர் நதிகள் இடையூராக நடந்துவிட்டன.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் விதியை நிர்ணயிக்கும் நதி.** தாண்ட முடியாததென்று நினைத்து ஜெர்மானியர்கள் ரைன் நதியை ஜெர்மனியின் விதியை நிர்ணயிக்கும் நதி என்று அழைத்தார்கள். இப்பொழுது 8 சேனைகள் ரைன் நதியில் நிற்கின்றன. மாண்ட்காமரி வெசலிலும், ஹாட்ஜாஸ் ரெமேகனிலும், பாட்டன் காப்ளன்ஸிலும், பிரெஞ்சுப்படைள் வடக்கு ஆல்ஸாஸிஉள்ள லாட்டர்பர்க்கிலும் இருக்கிறார்கள். சிலர் நதியையும் தாண்டிவிட்டார்கள்.

ஹாட்ஜஸ்தான் முதலில் நதியைத்தாண்டியவர். பலஹீனமான பாகத்துக்காக ஆராய்ச்சி செய்துவந்தபொழுது பின்வாங்கும் ஜெர்மானியர்கள் தகர்த்துவிடாமல் விட்டுப்போன லூடன்டார்ப் பாலமுள்ள ரெமேசன் பலஹீனமானதென்று கண்டுபிடித்தார். இது இனாமாகக்கிடைத்தது போலாயிற்று. தைரியத்துடன் நதியைத் தாண்டி 24 மைல்கள் நீளமும், 8 மைல்கள் அகலமும் உள்ள ஒரு முன்னேறும் வாசலை அமைத்து கொலோனிலிருந்து பிராங்க்பர்ட்டுக்குச் செல்லும் ரஸ்தாவை துணித்துவிட்டார். மனிதர்களையும், தளவாடங்களையும் குவிப்பதற்காக அவர் ஒரு தாத்காலிகமான பாலத்தையும் அமைத்தார். இது புத்திசாலித் தனமானமாக மாறிவிட்டது. லூடன்டார்ப் பாலம் சனிக்கிழமையன்று நொருங்கிய பொழுது புதிய பாலம் உபயோகமுள்ளதாக இருந்தது. இப்பொழுது லூடன்டார்ப் பாலமும் பழுதுபார்க்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**நடவடிக்கை எப்படி ?** ரைன் நதியை இவ்வளவு சுலபமாக அடைந்து நேசதேசப் படைகள் எவ்விதம் தாண்டின? மேற்குப்போர்முனையில் போரை நடத்தி வருகிறவரும், தற்காப்புப்போரில் மிகவும் அனுபவம் வாய்ந்தவருமான ருண்ட்ஸ்டெட் ஏன் விட்டுக்கொடுத்துவிட்டார்? கொஞ்ச காலத்திற்குமுன் "நேசதேசத்தார்கள் ஒரு மிலிமீடர்தான் முன்னேறியிக்கிறார்களென்றும், அது கதையில் சொல்லப்படும் ஆமையின் அளவுக்கு ஒப்பிடக்கூடியவறென்றும் ருண்ட்ஸ்டெட் சொல்லிவந்தான். அப்படியிருந்தும் சிலவாரங்களுக்குள் ரோயர் நதியைத் தாண்டி ரைன்லாந்திற்குள்ளும் இப்பொழுது ரைன் நதியிலிருந்தும் ஏன் பின்வாங்கிவிட்டான். ராணுவ நிபுணர்கள் ரைன் நதி எங்கு, எப்பொழுது, எப்படி கடக்கப்படும் என்று ஊகிக்கும் முன்னரே இது நடை பெற்றுவிட்டது.

ருண்ட்ஸ்டெட் இந்த நிகழ்ச்சியைத் தடுக்க பகீரத பிரயத்னம் செய்தான் என்பதில் ஐயமில்லை. அந்த அபயாத்தை எதிர்பார்த்து அவன் ஆர்டெனிஸில் பதில் தாக்குதலைச் செய்தான். அதனால் நேசதேச நடவடிக்கை ஜனவரி மாதத்திலிருந்து பிப்ரவரி ஆரம்பம் வரையில்தான் தாமதப்பட்டது. ரோயர் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்தி நேசதேசத் தாக்குதலை பிப்ரவரி முடிய ஒத்திவைத்தான். இரண்டாவது தாமதம் நேசதேசத்தாருக்கு உண்மையில் சௌகரியமளித்தது. அந்த அவகாசத்தில் மாண்ட்காமரி வடக்கில் படைபலத்தைப் பெருக்கிக்கொண்டு ருண்ட்ஸ்டெட்டின் படைகளை வடக்கு பிராந்தியத்துக்கு இழுத்துவிட்டான். அமெரிக்கப் படைகள் இருந்த இடத்தில் பலஹீனம் ஏற்பட்டது. இவ்விதமாக மாண்ட்காமரி கொலோனையும், காப்ளன்ஸையும், லாடன்பர்க்கையும் கைப்பற்றினான். மாண்ட்காமரியைக்கண்டு ருண்ட்ஸ்டெட் கலங்குகிறான். அந்தப் படைத் தலைவர் எங்கு, எப்படி அடிப்பார் என்று அவனுக்கு விளங்கவில்லை. அவன் புதிய உபாயங்களைக் கையாளுகிறான். அவனுடைய தந்திரம் தெரியாதவரையில் ருண்ட்ஸ்டெட் அங்கிருக்கும் படைகளை வேறு இடத்திற்குக் கொண்டுபோக முடியாது.

வி வி வி வி வி

**ரெமேகன்.** நதியைத்தாண்ட இது சௌகரியமான இடமில்லை. அதன் பிரவாகத்தை ஜெர்மானியர்கள் இஷ்டப்படி பெருக்கி விடலாம். அதற்கு கிழக்கில் மலைக் குன்றுகளுள்ள பிரதேசமிருந்து வருகிறது. ஆகிலும் இ...

தெய்வானுகூலமாகக் கிடைத்தது. நஷ்டம் நறைவானதென்றும், துரோகத்தினால் விளைந்ததென்றும் ஜெர்மனி பிரசாரம் செய்துவருகிறது. இந்த சிறந்த நடவடிக்கையில் வேகமும், தைரியமும், திடீர் தாக்குதலும் காணப்படுகின்றன. ராணுவ வெற்றிக்கு இவைகள்தான் முக்கியமென்று நெப்போலியன் சொல்லியிருக்கிறான். ஹாட்ஜவின் நடவடிக்கையை, நெப்போலியன் யுத்தத்தில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டுவிட்டதென்று ஆஸ்திரியர்களை ஏமாற்றி லானிஸ் வியன்னாவிலுள்ள பாலத்தைக் கைப்பற்றியதற்கு ஒப்பிடலாம். அதன்பின்தான் ஆஸ்டர்லிட்ஸ் போர் நடைபெற்றது. இங்கு ஹாட்ஜட் அந்த முறையைக் கையாளவில்லை. ரூண்ட்ஸ்டெட் பின்வாங்காமலிருப்பதற்கு லூடன்டார்ப் பாலத்தை அழித்துவிடாமல், பாலத்திற்குப் பின்புறமுள்ள போக்குவரத்துகளை அவனுடைய விமானப்படைகள் நொருக்கிவிட்டன. ரூண்ட்ஸ்டெட் பின்வாங்க முடியாததுடன் பாலத்தை தற்காப்பு செய்யவும் அல்லது அழிக்கவும் உதவிப்படைகளை அவன் கொண்டுவரக்கூடவில்லை. படைகளைக் கொண்டுவந்து பீரங்கிகள் மூலம் பாலத்தை அழித்தபொழுது அந்த நடவடிக்கை காலம் தப்பிவிட்டது. பாலம் நொருங்கியபோதிலும் நேசதேசப்படைகள் அதைத் தாண்டிவிட்டன.

இந்த வாரத்தில் ஜெனரல் பாட்டனின் படைகள் வீரன் நதியை அடைந்தன. பிரெஞ்சுப்படைகள் ஆல்ஸாஸ் பகுதியில் முன்னேறியிருக்கின்றன. இந்தப் புதிய வெற்றிகளினால் சார் நதிப் பள்ளதாக்குக்கும், ரூர் பிரதேசத்துக்கும் ஆபத்து அதிகரித்துவிட்டது.

வி வி வி வி வி

**ஓடர் நதிக்கான போர்.** ஓடர் நதியின் நுனி பாகம் ரைன் நதியின் நுனி பாகத்தைப் போல அவ்வளவு பலமான இடையூராக இல்லாவிட்டாலும், ரைன் நதியை நேசதேசப் படைகள் சுலபமாகத் தாண்டியதுபோல ஓடர் நதியை ருஷ்யர்கள் தாண்டமுடியவில்லை. ரூண்ட்ஸ்டெட்டிடம் போதுமான படைகள் இல்லாததினாலேதான் நேசதேசப் படைகள் ரைன் நதிக்கு சுலபமாக முன்னேற முடிந்தது.

கிழக்குப் போர் முனையில் அநேக வாரப்போருக்குப்பின் சூகோவ் ஓடரை கஸ்ட்ரினில் இப்பொழுதுதான் தாண்டியிருக்கிறான். இதற்குக் காரணம் அவன் குறுகிய போர்முனையில் சண்டை செய்யவேண்டியிருக்கிறது. விலாப்பக்கங்களில் ரக்ஷணையில்லை. ரோகோஸோவ்ஸ்கி வடக்கிலும், கோனியேவ் தெற்கிலும் பார்ச்வத்தை பலப்படுத்தும்வரையில் அவன் காத்திருக்கவேண்டும். வடக்கில் பிராங்கபர்ட்டும், தெற்கில் பிரெஸ்லாவும் இன்னும் ஜெர்மன் வசமிருந்து வருகின்றன. வடக்கு பார்ச்வத்தில் ருஷ்யபலம் ஓங்காமலிருப்பதற்காக சந்தர்ப்பம் ஏற்பட்டால் சூகோவை மத்தியில் பலமாகத் தாக்குவதற்கும் மேற்கு போமரோனியாவில் அவர்கள் படைகளைக் குவித்திருக்கிறார்கள். இதை எதிர்பார்த்து சூகோவ், பால்டிக் துறைமுகமான ஸ்டெட்டினை நோக்கி வடக்குமுகமாக முன்னேறியிருக்கிறான். இது ரோகோஸோவ்ஸ்கியிருக்கும் இடத்திலிருந்து 20 மைல்கள் தாண்டியிருப்பதால் மத்தியில் ஏராளமான ஜெர்மன் படைகள் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

தெற்கில் ருஷ்ய முன்னேற்றத்தைக் கண்டு அஞ்சி, ஜெர்மானியர்கள் டான்யூப் நதிக்கும் பாலடான் ஏரிக்கும் மத்தியில் இரண்டு வாரங்களுக்குமுன் ஒரு பதில் தாக்குதல் செய்தார்கள். இது பயன்படவில்லை.

இந்தத் தோல்விகளுக்கு ஜெர்மானியர்கள் குடெரியானைப் பலி கொடுத்துவிட்டார்கள். அவர் வேலையிலிருந்து பர்த்தரபு செய்யப்பட்டதாகவும் அவருக்குப் பதிலாக பெர்டினண்ட் ஷோர்னர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. ஒருவகையில் குடெரியானுக்குத் தகுதியான சிக்ஷை ஏற்பட்டுவிட்டது. சம்பூர்ண யுத்தத்தை ஆதரிப்பவர் குடெரியான்தான். ஜெர்மானியர்கள் பிரான்ஸ், போலந்து, ருஷ்யாவை 1940, 41-ம் வருஷத்தில் தாக்கியபொழுது ஜெர்மன் கவசம் பூண்ட படைகளுக்கு அவன் தலைவராக இருந்தான். நிராயுதபாணிகளான ஆடவர்களும், ஸ்திரீகளும் ரஸ்தாக்களில் துரத்தப்பட்டு அதன்பின் யந்திர பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அப்பேர்ப்பட்ட அவர் மார்ச்சு மாதம் 6-ம் தேதியன்று அயல்நாட்டு பத்திரிகை பிரதிநிதிகளிடம் ருஷ்யர்களின் செய்கைகளை ஹூணர்களுடையவும், காட்டுமிராண்டிகளுடையவும் நடவடிக்கைக்கு ஒப்பிடலாம் என்று சொன்னார். குடெரியானும் ஒரு ஹூணரானபடியால் அவர்களின் பழக்க வழக்கத்தை நன்கு அறிவார். நாஸிகளின் மூதாதையர்களும் அவர்கள்தான். அயல்நாட்டு பத்திரிக்காசிரியர்கள் அவருடைய வார்த்தைகளைத் துச்சமானதென்று தள்ளியிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. அதுபோல்தான் ஜெர்மன் பிரசாரம் பூராவும் பரிகரிக்கத்தக்கது. ஹூணர்களின் பழக்க வழக்கங்களில் நாஸிகளுக்கு ஏகபாத்தியம் உண்டு. லப்ளின், லிடிஸ், கார்காவ் அக்கிரமங்களை உலகம் மறந்துவிடாது.

**கிழக்குப் போர்முனை.** பெர்லினை நோக்கி ஜுகோவ் முன்னேற ஆரம்பித்து விட்டார். தலைநகருக்குக் கிழக்கே 40 மைல்களிலுள்ள கஸ்ட்ரினிலுள்ள தற்காப்புகள் பிளக்கப்பட்டன. வடக்கில் ஸடெட்டினுக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டது. கோனியேவ் பலமாகத் தாக்கிவருகிறான். ஆகையால் பிராங்க்பர்ட்டிலிருந்து பால்டிக் கடல் வரையிலுள்ள 150 மைல்கள் கொண்ட ஓடர் நதியின் மத்திய நுனி பாகங்களில் மறுபடியும் சுறுசுறுப்பு ஏற்பட்டுவிட்டது.

ஓடர் நதி தற்காப்புகள் நொருங்கிவிடும்போல தோன்றுவதால் ஜெர்மானியர்கள் பிராங்க்பர்ட்டுக்கு வடக்கில் ஓடர் நதியின் கிளை நதியான ஆல்டி ஓடர் ஓரமாக புதிய அரணைத் தயார் செய்து வருகிறார்கள்.

கடைசியாக நாஸிகள் தென்கிழக்கு ஜெர்மனியில் துருஞ்சியா காட்டுக்கும் ஆஸ்திரிய ஆல்ப்ஸ் மலைக்கும் நடுவில், பவேரியா, சாக்ஸனி, மேற்கு செகோஸ்லாவேகியா, ஆஸ்திரியா, மேற்கு ஹங்கேரி முதலிய பிராந்தியத்தில் நின்று போராடப்போவதாக சூசகங்கள் காணப்படுகின்றன.

வி வி வி வி வி

**வறுமையும், குழப்பமும்.** ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமையும் மோசமாகிவருகிறது. உணவுப்பொருள் மிகவும் குறைந்துவிட்டது. செழிப்பான ரைன்லாந்து பிரதேசத்திலும் இந்த கதிதான். ஆம்காட் நிர்வாகத்தைச் சேர்ந்த மிஸ்டர் A. கோர் பின்வருமாறு சொல்லுகிறார். "ஜெர்மன் நகரங்களிலும், ஜனங்களிடமும் ராஜீயக்குழப்பமும் பலமான தேக அசௌக்கியமும் காணப்படுகிறது. நீதிமுறையும் ஒழுங்குமுறையும் மறைந்துவிட்டன. காடுகளிலும், குகைகளிலும், ஒளிகளிலும் இருக்கும் பொதுமக்கள்தான் நாட்டைவிட்டு ஓடாமலும் குண்டுவீச்சுக்குட்படாமலும் தப்பித்து வருகிறார்கள்." டைம்ஸ்ஆப் இந்தியாவின் லண்டன் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார். "ஜெர்மனியிலுள்ள ஏழு மிலியன் ஜனங்களின் நிலைமையை நினைக்கும்பொழுது என் மனம் பதறுகிறது. ரூர் அழிப்பட்டுவிட்டது. ஹாம்பர்க், டேயிஸ்பர்க், வப்பர்தால், பெர்லின் முதலிய நகரங்கள் பாழாகிவிட்டன. நிலத்தைத்தவிர பாக்கி உற்பத்தி சாதகங்கள் அழிந்துவிட்டன. நிர்வாகத்தின் சகலவிதமான அமைப்புகளும் நொருங்கிவிட்டன."

மிஸ்டர் வால்டர் லிப்மான் பின்வருமாறு எழுதுகிறார்:—சிக்கலாக உள்ள நவீன பொருளாதார நிலைமையில் வசித்துவருவதும், தங்களுக்கு சொந்தமான நிர்வாகம் இல்லாததுமான 7 அல்லது 8 மிலியன் ஜனங்களுக்கு வாழ்க்கைக்குரிய அவசியமானவைகளை வழங்குவதில் என்ன நேரிடுமென்று சரித்திரத்திலேயே இதற்குமுன் ஒரு உதாரணமும் இல்லை."

வி வி வி வி வி

**சமாதானப் பேச்சு.** 12 வருஷமாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் வீரர்களுக்கு இன்னமும் வெற்றியில் நம்பிக்கையிருக்கிறதென்று ஹிட்லர் சொற்பொழிவாற்றியபோதிலும், அவருடைய அயல் நாட்டு மந்திரி தூதர்களைக் கொண்டு ஸ்டாக்ஹோமிலுள்ள பிரிடிஷ் தூதர்களுடன் சமாதானம் செய்துகொள்ள பேச்சுகளை ரகசியமாகத் துவக்கியிருக்கிறார். நேசநாடுகளுக்குள் பிளவு உண்டுபண்ணுவதிலும் அவர்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. சமாதானப் பேச்சுகளை பிரிடன் ஏற்காவிட்டால் ஜெர்மனி ருஷ்யா கையில் ஒப்படைக்கப்படுமென்றும் அது போல்ஷிவிஸம் மயமாகிவிடுமென்றும், யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டதுபோலாகுமென்றும் ஜெர்மனி சொல்லிவருகிறது. ஆகிலும் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள நேசதேசத்தார்கள் அனுபவம் பெற்றவர்களாதலால் இந்தப் பேச்சைக்கண்டு மயங்கிவிடமாட்டார்கள். இரு பக்கத்தாரும் முடியாது என்று பதிலுரைத்துவிட்டார்கள். நிபந்தனையற்ற சரணாகதிக்கு வேறு ஒரு மாற்றும் கிடையாது.

வி வி வி வி வி

**தூரக்கிழக்கு விஷயங்கள்.** ஐவோ ஜிமாவில் அமெரிக்கக் கொடி பறக்க விடப்பட்டு விட்டது. இந்த வெற்றி இயற்கையான தற்காப்புகளையும், சுரங்கவெடிகளையும், கொத்தளங்களையும் நொருக்கி அதிக சிரமத்தின் பேரில் கிடைத்ததாகும். ஜப்பானுக்கு சமீபத்தில் வந்துவிட்டார்களென்பதுதான் அதன் பயன். ஐவோ ஜிமாவில் அழிபட்ட விமான தளங்கள் பழுதுபார்க்கப்படுகின்றன. ஜப்பானைத் தாக்கக்கூடிய எல்லா சூபர் பறக்கும் கோட்டை விமானங்களும் அந்த தளத்தில் நிற்க முடியாததால் ஸைபூகியூவிலும் மற்ற தீவுகளிலும் உபரி விமான தளங்கள் அமைக்கப்படுகின்றன.

வி வி வி வி வி

**பிரெஞ்சு இந்தோ-சைனா.** இந்தோ-சைனாவிலுள்ள பிரெஞ்சுப் படைகள் டிகாலி சொல்லுவதுபோல முஸ்தீப்புகளின்றியில் ஜப்பானிய ராணுவத்துடன் போரை நடத்தி வருகிறார்கள். பிரெஞ்சு தேசியக் கமிட்டி சாத்தியமான

உதவியை அளித்து வருகிறது. பிரெஞ்சுப் படைகள் தூரக்கிழக்குக்குப் புறப்பட்டுவிட்டன. பிரெஞ்சு கடற்படை நேசதேச பஸிபிக் கடற்படையுடன் சேர்ந்துவிட்டது. ரிச்லியூ என்ற பிரெஞ்சுக் கப்பல் தூரக்கிழக்கு சமுத்திரத்துக்கு வந்துவிட்டது.

மற்ற வழிகளிலும் ஜப்பானுக்கு அபாயம் அதிகரித்துவிட்டது. அமெரிக்க கடல், தரை, ஆகாயப்படை ஜப்பானை அணுகிவிட்டன, அதை லக்ஷியம் செய்வதற்கில்லை. பிரிட்டிஷ் கடற்படையும் பஸிபிக்குக்கு வந்துவிட்டது. சீனர்கள் அதிகமாக எதிர்த்துப் போராடி வருகிறார்கள். டச்சுக் கிழக்கிந்தீஸ் தீவுகளும் கொரில்லாப் போரை நடத்திவருகின்றன.

பஸிபிக் கடலுக்கான போர் மத்திய பஸிபிக்கில் துவங்கிவிட்டது. வடக்கு பர்மா வீழ்ச்சி பெற்றது. மாண்டலே விழுந்துவிட்டதினால் அடுத்தபடியாக மத்திய பர்மா விடுதலை அடைந்துவிடும். சிங்கப்பூர் விடுதலை பெறும் நாளும் கிட்டிவிட்டதென்று கடற்தளபதி ஸொமர்வில் சொல்லிவிட்டார். பிரிடிஷ் நாசகாரிகள் அந்தமான் தீவின்பேரில் வெடிகுண்டுகளை வீசின.

வி வி வி வி வி

**ஜப்பான்.** ஜப்பானில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. நெருக்கடியான நிலைமையை சமாளிக்க ராணுவ நிர்வாகமும் ஒன்று படுத்தப்பட்டுவிட்டன. ஸோல்ஜருக்கும் பொது மக்களுக்குமுள்ள வித்தியாசம் மறைந்துவிட்டது. போர்முனையிலுள்ள ஸோல்ஜரைப்போலவே விமானத் தாக்குதலுக்குட்பட்ட பொது ஜனங்களும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்களென்ற தோற்றம் உண்டாகிவிட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் தாய்நாட்டைக் காப்பாற்ற பொதுஜன ரக்ஷகப்படை தயாராகிவிட்டது. ஸ்கூல்களும், கல்லூரிகளும், சர்வகலாசாலைகளும் ஒரு வருஷத்துக்கு மூடப்பட்டுவிட்டன. அந்த மாணவர்களும், ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடக் குழந்தைகளும் அமெரிக்காவையும், பிரிடனையும் நாசம் செய்ய ராணுவப்பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

வி வி வி வி வி

**ஸ்பெயின்.** உறவுகளை ரத்துசெய்துவிட்டு ஸ்பெயின் ஜப்பான் பேரில் போர் தொடுக்கலாம். பிலிப்பைன்ஸில் ஜப்பான் செய்த அக்கிரமங்களை பாஸிஸ்டு ஸ்பெயினும் மறந்துவிடவில்லை.

வி வி வி வி வி

**சரித்திரத்தில் முக்கியமான சமயம்.** பீல்ட் மார்ஷல் ஸமட்ஸின் வார்த்தைகள் ஆணித்தரமானவை. அதிக புத்திசாலித்தனமுள்ளவை. அவர் ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டைப்பற்றி திங்கட்கிழமையன்று பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

“சிறிய தேசங்கள் இனிமேல் தங்களைத் தற்காப்புச் செய்துகொள்ள முடியாது. உலகத்திலுள்ள மகத்தான ராணுவ வல்லரசும் புதிய யுத்த முறைகளுக்கு அடிபணிந்துவிட்டது. யுத்தம் இனிமேல் மூளாமல் நிரந்தரமாகத் தடுத்துவிட உபாயத்தைக் கண்டுபிடித்தாலொழிய எதிர் காலம் அளவிட முடியாதபடி கோரமாகயிருக்கும்.

ஆகையால் ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டைப் பற்றியும் அதன் முடிவுகளைப்பற்றியும் நான் கவலை கொண்டிருக்கிறேன். பெரிய வல்லரசுகள் மட்டுமல்லாமல் சிறிய தேசங்களும் இந்த மகாநாட்டின் நடவடிக்கைகளை மிகுந்த அக்கரையுடன் கவனித்து வருவார்கள் என்றும், அது வெற்றிகரமாக முடிய வேண்டுமென்று மனதார விரும்புவார்களென்றும” நான் நம்புகிறேன்.

---

## யுத்தத்தின் இறுதித் தாக்குதல் ஆரம்பம்.

### ரைன் நதியை நேசதேசப் படை கடந்தது.

நாம் முடித்துவிட்டோம். இன்று அதிகாலையில் ஜெனரல் ஹாட்ஜஸிடமுள்ள அமெரிக்க 1 வது சேனையைச்சேர்ந்த காலாட்படைகள் ரைன் நதியைத்தாண்டி அதன் கிழக்குக் கரையிலுள்ள புதிதாக சம்பாதிக்கப்பட்ட முன்னேறும் வாசலுக்குள் குவிந்து வருகிறார்கள் என்று மேற்குப் போர்முனையிலுள்ள டெயிலி மெயில் பத்திரிகையின் நிருபரான வால்ட்பார் எழுதுகிறார்.

ஜெர்மன் தலைநகரில் ருஷ்யப்படைகளைச் சந்திப்பது என்ற இறுதி லக்ஷியத்துக்குத்தான் போர் ஆரம்பமாகி விட்டது. இன்று நீங்கள் குதூகலப்படலாம். நமது மின்னல் தாக்குதலின் வெற்றி யுத்தத்தின் காலத்தை அநேக மாதங்கள் குறைத்துவிடும். பெர்லினில் இருந்து 290 மைல்களிலுள்ள முன்னேறும் வாசலில் நாம் ஏராளமான படைகளை குவித்து வருகிறோம்.

மார்ச்சு ௴ 7-ம் தேதி சாயங்காலம் 4-30 மணிக்கு முதல் சேனையைச்சேர்ந்த படைகள் திடீரென்று ரைன் நதியைத் தாண்டின. ஜெர்மானியர்கள் பிரமை அடைந்து விட்டார்கள். பானுக்கும், காப்ளன்ஸுக்கும் மத்தியில் அவர்கள் நதியைத் தாண்டினார்கள். சொல்ப எதிர்ப்புத்தான் காணப்பட்டது.

நதிக்குக் கிழக்குக்கரையை அடைந்தபின் அமெரிக்கர்கள் வேரூன்றிக் கொள்ள முயன்றார்கள். நமது முக்கியமான படைகள் குவிக்கப்பட்டன. அவர்களின் மகத்தான தாக்குதல்களில் ஜெர்மன் தற்காப்புகள் பிளவுபட்டு அட்டை வீடுகள் போல் நொறுங்கி விட்டன.

இந்தப்பிரதேசத்தில் ரைன் ½ மைல் அகலமிருக்கிறது. ரெமேஜன் பக்கத்திலுள்ள கரை செங்குத்தாக இல்லை. நதியின் குறுக்கே, ஏர்பெல் என்னும் நகரத்திற்கு தெற்கில் அநேக குன்றுகள் இருக்கின்றன. இருப்புப்பாதையுள்ள பாலம் ரைன் நதியைத்தாண்டி ஏர்பெலுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

முன்னேறும் வாசலிலிருந்து பெர்லினுக்கு நேர்முகமாகச் செல்லும் மார்க்கத்தில் காஸல், மாக்டிபர்க் என்ற நகரங்களிருக்கின்றன.

ரைன் நதியைத் தாண்டிய கதை எழுதப்படும் பொழுது அது இந்த யுத்தத்திலேயே மிகவும் விசித்திரமான நடவடிக்கையாக இருக்கும். நாம் ஒரு பாய்ச்சலை பாய்ந்தோம். அது வெற்றிகரமாக முடிந்தது.

நான் பால முனையிலுள்ள கமாண்டிங் ஆபீஸருடன் சம்பாஷணை செய்தேன். அவர் பின் கண்ட திருப்திகரமான செய்தியை வெளியிட்டார். "நாங்கள் அழகாக போர் புரிந்தோமென்று நீங்கள் சொல்லாம். நதியைத் தாண்டி எங்களிடம் நல்ல முஸ்தீப் உள்ள படைகள் இருக்கின்றன. எதிரி எங்கள் பேரில் உபயோகிக்க உத்தேசிக்கும் எந்த ஆயுதங்களையும் சமாளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

---

## தோல்விகளின் மூலம் ஜெர்மனியில் ஏற்பட்ட அதிர்ச்சி.

### கைது செய்யப்பட்ட ஸோல்ஜர்களின் அபிப்பிராயங்கள்

மார்டின் மூர்.

(இதாலியில் 8-வது சேனையுடனிருக்கும் டெயிலி டெலகிராபின் நிருபர்).

ஹிட்லரும், கோயபல்ஸும் ஒலிபெருக்கில் இறுதி வெற்றி நமக்குத்தான் என்று வெறி பிடித்தார்போல் ஜெர்மன் ஸோல்ஜருக்கு ஒலிபெருக்கியதின் விளைவு என்ன? எட்டாவது சேனையின் முகாமுக்கு அழைத்துச் செல்லுவதற்காக லாரியை எதிர் பார்த்து ரஸ்தாவுக்கருகில் ரக்ஷகர்களுடன் நின்றுகொண்டிருந்த கைதிகளின் கோஷ்டிகளிலுள்ள வாலிபமுள்ள கமிஷன் பெறாத ஒருவரை இவ்விதம் வினவிய போது அவர் பின்வருமாறு சொன்னார்.

"யுத்தத்தை இழந்து விட்டோமென்று எங்களில் 80 சதவிகிதம் உள்ளவர்கள் அறிவோம். 15 சதவிகிதம் அதைப்பற்றி சிந்திப்பதில்லை. மற்ற 5 சதவிகிதம் அற்புதமான ரகசிய ஆயுதத்தை இன்னும் நம்பியிருக்கிறார்கள்."

இந்தக் கைதிக்கு சம்பாஷிக்க அதிக ஆவலுண்டு. ஆகிலும் அவனுடைய சகாக்கள் காதில் விழாமல் பேசவேண்டுமென்று அவன் சற்று ஒதுங்கி நின்றான். அவன் 80 சதவிகித கோஷ்டியைச் சேர்ந்தவன்.

ஜெர்மன் சேனையில் அல்லது ஜெர்மனியில் கலவரம் ஏற்பட்டுத்தான் இந்த யுத்தம் முடியுமாவென்று அவனைக்கேட்டோம். "இல்லை" என்று அவன் சுறுசுறுப்பாக பதிலுரைத்தான்.

"எல்லோரும் யுத்தித்தில் வெற்றிபெறும் நம்பிக்கையை இழந்தபின்னுமா" என்று கேட்டேன்.

"கலவரம் என்பது சாத்யமற்றது. "நிலைத்து நிற்க ஒரு சதுர மீட்டர் இடமிருந்தாலும் ஹிட்லரும் நாஸிகளும் போரை நடத்தியே தீருவார்கள்."

இதேவிதமான நம்பிக்கையற்ற முரட்டுத்தனமும் பிடிவாதமும் சேனையிலும் காணப் படுகிறதென்று இந்த வாலிபன் அபிப்ராயப்பட்டான். இந்தப் போர்முனையில் அநேகர்கள் சேனையிலிருந்து ஓடிவிட்டார்கள். ஆகிலும் அவர்களில் பெரும்பாகத்தோர் போலிஷ் மக்களும் இஷ்டப்படாத ஜெர்மானியரல்லாத கட்டாய முறையில் சேர்க்கப்பட்டவர்களும்தான். தோல்வி நிச்சயமென்று தெரிந்தபின்னும் ஏன் இன்னும் அநேகர்கள் சரண்புகுரவில்லையென்று

நான் கேட்டேன். "சரணடைவது அகௌரவம்" என்று அவன் ஆக்ரோஷத்துடன் பதிலுரைத்தான். அதன்பின் சமாதான முறையில் பின்வருமாறு சொன்னான். "மேலும், சரணடைய உத்தேசிக்கும் மனிதர்கள் ஜெர்மனியில் அவர்களுடைய குடும்பத்திற்கு என்ன ஆகுமோவென்று பயப்படுகிறார்கள்."

ஆகிலும் சரண் புகுந்து விடுகிறவர்கள், அல்லது எதிர்த்துப் போராடுவதாகப் பாசாங்கு செய்து பிறகு கைது செய்யப்படுகிறவர்களையும் கண்டு ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் கவலைகொண்டிருக்கிறார்கள். உறுதியுடன் சண்டைபோட்ட இந்தக் கைதி சரணடையக் கூடாதென்று ஸோல்ஜர்களுக்கு அடிக்கடி பிரசாரம் செய்யப்படுகிறதென்றும் சொன்னான். கைது செய்யப்பட்டால் அவர்களை நேசதேசத்தார்கள், முக்கியமாக அமெரிக்கர்கள், இழிவாக நடத்துவார்களென்று அவர்களுக்குப் பிரசாரம் செய்யப்பட்டது.

சேனையிலுள்ளவர்கள் பெரும்பான்மையோர்கள் தங்களுடைய குடும்பத்தாரின் கதி என்ன ஆயிற்றோ என்றும், வெடிகுண்டுவீச்சின் விளைவு, உணவுப்பொருள் குறைவைப்பற்றியும் தான் கவலைப்படுகிறார்கள். அவனுடைய வீடு இருக்கும் நகரம் வெடிகுண்டு வீச்சுக்குட்பட்டது. 65 வயது உள்ள அவனுடைய தகப்பன் உள்நாட்டு ரக்ஷகப்படையில் பயில்விக்கப் படுகிறான். அவனுடைய குடும்பத்திற்கு உணவுப் பொருள் குறைவேற்பட்டிருக்கிறதென்று அவனுக்குத் தெரியும். ஏனெனில் அவனுடை தாயார் புதிய பங்கிடு திட்டங்களை வெளியிட்டிருக்கும் பத்திரிகையின் ஒரு துண்டை அவனுக்கு அனுப்பியிருக்கிறாள்.

"நேசதேசத்தார்கள் வெற்றிபெற்றபின் ஜெர்மனிக்கு என்னநேரிடுமென்று நினைக்கிறாய்" என்றேன்.

"ஜெர்மனி கூறுபோடப்படும். பவேரியாவும் ஆஸ்திரியாவும் நிச்சயமாய் சுதந்திரம் பெற்றுவிடும். ரைன்லாந்தும் அவ்வழியைப் பின்பற்றும்."

"ஜெர்மனியில் எவ்விதமான நிர்வாகம் அமைக்கப்படும்." "நிச்சயமாக ஜனநாயகம்தான். யதேச்சாதிகார மோசடியை நாங்கள் அனுபவித்துவிட்டோம்."

கைதி சொன்ன மறுமொழிகளைத்தான் அப்படியே எழுதியிருக்கிறேன். அந்த மறுமொழிகள் சுறுசுறுப்பாக வந்தன. மறுமொழிகளைச் சொல்ல அவன் ஆவல் உள்ளவன் போலிருந்தான். அவன் இதாலியில் பிடிக்கப்பட்ட பெரும்பான்மையான முரட்டு ஸ்வபாவமுள்ள கைதிகளைப்போல அவன் இருக்கவில்லை, ஆகிலும் அவன் யுத்தத்துக்குமுன் இருந்த ஜெர்மன் வாலிபர்களை உறவெடுத்தவன் போன்றவன். அவன் சொல்வதுபோல அவனுடைய அபிப்பிராயங்களும் மனப்பான்மையும் ஜெர்மானியர்களின் மனோநிலைமையையும் பிரபலிக்கிறதென்று கருதினாலும் கருதாவிட்டாலும் இந்த அபிப்பிராயங்களை வெளியிடுகிற ஸோல்ஜர் கிழக்கு, மேற்குப் போர்முனையில் போர் புரியும் சேனையிலுள்ளவனல்லவென்றும் பின் துரத்தி அடிக்கப்படாத சேனையிலிருப்பவனென்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

---

# ஜெர்மன் உள்நாட்டுப்படையின் சிரமங்கள்.

## ஆடைகளும், ஆயுதங்களும் குறைந்துவிட்டன.

### மான்செஸ்டர் கார்டியனின் ராணுவ நிருபர்.

ஜெர்மன் உள்நாட்டு ரக்ஷகப்படைக்கு ஆடைகளை வழங்குவதுதான் இப்பொழுது மகத்தான பிரச்னையாக இருந்து வருகிறது. போதுமான ஆடைகள் இல்லை. ரக்ஷகப்படைகளைச் சேர்ந்தவர்கள் ஜெர்மன் படைகள் தேசாபிமானப் படைகளை எவ்விதம் நடத்தியிருக்கிறார்கள் என்று நன்கு அறிவார்களாகையால், சாதாரண ஆடையுடன் போர் முனைக்குச் செல்ல அவர்கள் ஊக்கம் கொள்ளவில்லை. மேலும் மதிப்புள்ள போர்ப்படைகளைச் சேர்ந்தவர்களாவென்று அடையாளம் காட்டக்கூடிய முறையில் கையைச்சுற்றி ஒரு அடையாளத்தைப் போட்டுக்கொண்டும் செல்ல அவர்கள் பிரியப்படவில்லை.

உள்நாட்டு ரக்ஷகப்படைக்கு செய்யப்படும் பிரசாரத்தில் ஜெர்மனியிலுள்ள ரக்ஷகப் படைக்கும், ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜெர்மனியை எதிர்த்துப் போராடும் கொரில்லாப் படைகளுக்கும் மகத்தான வித்தியாசமுண்டென்று சொல்லப்படுகிறது. ஆடைகள் அவசியமில்லை என்று சொல்லுவதை உள்நாட்டு ரக்ஷகப்படையைச் சேர்ந்த அநேகர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

இந்த சிரமத்தை நிவர்த்திக்க ஓய்வு நேரங்களில் பழைய ஆடைகளைத்திரட்டும் வேலையில் நாஜிகள் ஈடுபடுகிறார்கள். சுங்கவரி இலாகா ஆபீஸர்கள், நெருப்பு அணைக்கும் படையினர், நாஜிக்கக்ஷியைச் சேர்ந்தவர்கள் முதலியவர்களின் ஆடைகளும் வரவேற்கப்படுகின்

றன. யுத்தத்துக்குமுன் ஜெர்மன் குடும்பங்களில் அநேக விதமான ஆடைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. ஆகிலும் இப்பொழுது அவைகள் போதுமான அளவு இல்லை. ஜெர்மனியிலுள்ள B. D. M.—அதாவது பிரிடிஷ் W. V. S. க்கு சமமானது—சாதாரணத் துணிகளைக்கொண்டு ஆடைகளைத் தயாரித்து வருகிறது.

இவற்றின் பயனாகவும் ஆடைகளுக்கு சாயம் தோய்க்கவேண்டுமென்ற போதனைப் படிக்கும் உள்நாட்டு ரக்ஷகப்படையின் ஒத்திகை வேஷதாரிகளின் கோஷ்டி போல தோன்று கிறது. பெர்லினில் உறுதி மொழிகூறும் ஒரு ஒத்திகையில் ஒருவர் "லோகன்கிரின்" என்ற நாடகத்திற்குப்பின் நாடக ஆடையிலேயே வந்து சேர்ந்தார். இது விந்தையானதென்று ஒருவரும் நினைக்கவில்லை.

ஆடைகளைப்பற்றி உள்நாட்டு ரக்ஷகப்படைக்குக் கவலை என்பதில்லை. ஆயுதங்களும் போதுமான அளவுக்கு இல்லை. அவர்களுக்கு நல்ல முறையில் ஆயுதங்களிருக்கின்றன என்று வெளிப்படுத்துவதற்காக ஒரு ஒத்திகை நடத்தப்பட்டது. சில மணிநேரம் வரையில் ஜனங்களுக்கு உற்சாகம் ஏற்பட்டது. பிறகு அந்த ஆயுதங்கள் சமீபத்திலுள்ள சேனையிடமிருந்து கடன் வாங்கப்பட்டதென்றும் ஒத்திகைக்குப்பின் அவர்கள் திரும்பிக்கொடுக்கப் பட்டுவிடுமென்றும் அவர்கள் அறிந்துகொண்டார்கள். அவைகளுக்கு முஸ்தீப்புகளை வழங்கு வதற்காக ஜெர்மனியிலுள்ள விளையாட்டுத் துப்பாக்கிகளையும் கைத்துப்பாக்கிகளையும் சேகரிப்பதற்கு பிரயத்தனம் செய்யப்படுகிறது

---

## ஸ்டெட்டின்—பால்டிக்கிலுள்ள மிகப்பெரிய துறைமுகம்.

### யுத்தம் அநேக ரகசியங்களை பகிரங்கப்படுத்துகிறது.

ஸோபியா போஸ்னுஸ்கா.

(டெயிலி டெலகிராப்).

மார்ஷல் ஜுகோவ் பால்டிக்கில் ஜெர்மனியின் மிகப்பெரிய நகரமான ஸ்டெட்டினைப் பிடித்துவிட முயலுகிறான். அவனுடைய படைகள் போமரேனியாவில் வெகுதூரம் பரவியிருக்கின்றன. காதிரைன் பெரியார் ஸ்டெட்டினில்தான் பிறந்தார். அங்குதான் பெர்லின் ஜனங்கள் உல்லாசமாகக் கூடுமிடம். மேற்கு போமரேனியா விடுமுறை வாசஸ்தலம். யுத்தம் துவங்கியபின் அது ஜெர்மன் கமாண்டின் அமைதியுள்ள பிரதேசமாகவும், புதிய ஆயுதங்களைப் பரிக்ஷை செய்யும் இடமாகவும் மாறிவிட்டது. பீன முண்டி என்பது ஒரு முக்கியமான இடம்.

யுத்தத்திற்கு நான்கு வருஷங்களுக்குமுன் ஒரு வசந்த காலத்திலும் வேனீர் காலத்திலும் சனிக்கிழமையன்று பெர்லின் வாசிகள்கூட்டம் கூட்டமாக ரயில் வண்டிகள் மூலமாகவும், மோட்டார்களிலும் ஸ்டெட்டினுக்கும் போமரேனியாவின் கடற்கரைப் பிரதேசங்களுக்கும் சென்று குதூகலமாகக் காலம் கழித்துவருவார்கள். ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் என்ன திட்டம் போட்டுவருகிறார்களென்பதை அவர்கள் கொஞ்சம்கூட அறியவில்லை.

ஸ்டெட்டின் மனதைக் கவர்ச்சி செய்வதற்கு, ஷொர்சீஅணைக்கருகில் ஓடர் நதி பேரில் இருப்பதினால் அதன் ஒப்பற்ற அமைப்பும் அழகும்தான் காரணமாகும். அது புராதன மான நகரம். 12-ம் நூற்றாண்டிலிருந்த போமரேனியப் பிரபுவின் இருப்பிடம். 1360-ம் வருஷம் முதல் ஹான்சியாடிக் சங்கத்தின் மெம்பர்.

அதன் முக்கியமான சவுக்கத்தில் பிரெடரிக் வில்லியம் என்ற குதிரை வீரன் ஞாபகச் சின்னம் காணப்படுகிறது. அவர்தான் பிரெடரிக் பிரமுகரின் மூதாதையர். பிரஷ்ய அதிகாரத் துக்கு அஸ்திவாரம் போட்டவர். அந்தச் சிலை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அந்தக் குதிரை ஒரு அசாத்யமான காரியத்தைச் செல்லத் தாண்டுவது போல் அமைக்கப்பட்டிருக் கிறது. ஜெர்மனியிலிருந்து விடுமுறைக்குச் செல்லும் நபர்கள் அந்த சிலையை ஆவலுடன் கண்ணுற்று பார்ப்பார்கள். ஆகிலும் அதில் அவர்களுக்கு ஒரு ஆச்சரியமும் தோன்றாது.

அதேவிதமாக துறைமுகத்திலுள்ள அமைப்புகளையும் அவர்கள் பாராட்டுகிறார்கள். ஆனாலும் அவைகள் பிரயோஜனமுள்ளதாக இருக்கின்றனவாயென்று அவர்கள் விசாரிப்ப தில்லை. தெற்கு ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்படும் நிலக்கரி எம்டனிலுள்ள கப்பல் களில் ஏற்றப்பட்டு, உள்நாட்டு நதிகள்மூலம் ஸ்டெட்டினுக்குக் கொண்டுபோகப்பட்டு அதன் பின் படகுகளில் ஏற்றப்பட்டு இறுதியில் பெர்லினுக்குக் கொண்டுபோகப்பட்டன. இந்த பிரயாணம் 2,000 மைல்கள் கொண்டது. 350 மைல்கள் செல்லுவதைவிட்டு இந்தத் துறைமுகத்துக்கு சுறுசுறுப்பு ஏற்படுத்துவதற்காக இந்த முறை கையாளப்படுகிறது.

ஸ்டெட்டினைச் சுற்றியுள்ள இனிமையான சந்தோஷகரமான பிரதேசத்தில் அநேக ரகஸ்யங்களிருக்கின்றன. அங்கிருந்து தலைநகரத்துக்குச் செல்ல அமைக்கப்பட்ட ரஸ்தாக்களும், சிலாக்கியமான இருப்புப்பதை மார்க்கங்களும் பொதுஜன சௌகரியத்துக்காக அமைக்கப்படவில்லை. ஒய்வு காலத்தில் சென்ற பிரயாணிகள் அறியக்கூடாத அநேக ரகஸ்யங்களையும் போமரேனியா யுத்த சமயத்தில் வெளியிட்டுவிட்டது.

---

# ரைன் நதிப் போரில் விமானப் படையின் அலுவல்கள்.

## நாஸிகளின் ரஸ்தா இருப்புப் பாதை போக்குவரத்துக்களின் சிதைவு.

விங் கமாண்டர் *L. V.* பிரேசர்.

ரைன் நதிக்கான போரில் முதல் பாகம் அநேகமாக முடிவடைந்து விட்டது. இந்தப் போரில் ஒன்றுபட்ட பிரிடிஷ், அமெரிக்க விமானப் படையின் சக்தி ஜெர்மனியின் பின் வாங்குவதை துரிதப்படுத்தவும் தடை செய்யவும் மகத்தான முறையில் உபயோகிக்கப் பட்டது.

சகலவிதமான போக்குவரத்துக்களுக்கும் விளைந்த நஷ்டம் குறிப்பிடத் தக்கது. இருப்புப் பாதைகள் 1,200 இடங்களில் துணிக்கப்பட்டன. ஒரு வாரத்தில் ஜெர்மன் பீரங்கிகளுக்கு குண்டுகளில்லாமல் போய்விட்டது. இருட்டில் குவிக்கப்பட்டிருந்த, யூ படகுகளும், தோணிகளும், இழுப்புக் கலன்களும் மூழ்கடிக்கப்பட்டன. ரைன நதியை ஜெர்மன் துருப்புகளும், ஆயுதங்களும் தாண்டிச் செல்லாமல் தடை செய்யும் எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

நேசதேச டாக்டிகல் விமானப் படைக்கு நான்கு முக்கியமான அலுவல்கள் உண்டு. (1) ஒவ்வொரு போர்முனையிலுமுள்ள முன்னேறும் தரைப் படைகளுக்கு ஒத்தாசை செய்வது. (2) ஜெர்மானியர்கள் சுலபமாகப் பின்வாங்காமல் தடுப்பது. (3) ரஸ்தாக்களிலும் இருப்புப் பாதைகளிலும் செல்லும் கவசத்தை அழித்து எதிரியின் பலத்தைக் குறைப்பது. (4) போர் முனைக்குப் பின்னுள்ள பிரதேசத்திலிருந்து போர் முனையைத் துணித்து எதிரிகள் பதில் தாக்குதலைச் செய்யாமலும் பின்வாங்குவதற்கு உதவி பெறுமலும் செய்து விடுவது.

கவசம் பூண்ட ஒரு சேனை விசாலமான நதியைத் தாண்டிப் பின்வாங்கும்பொழுது தாக்குகிறவர் பாலத்தின்பேரில் வெடி குண்டுகளை வீசுவதும் நின்றுவிட வேண்டியதில்லை. பாலங்களையும், போக்குவரத்து சாதனங்களையும் அழித்துவிடுவது அவசியம்தான். ஆகிலும் நேசதேசத்தார்களுக்கு விமான ஆதிக்கமிருப்பதினால் அவர்கள் லாபகரமாகவும் சுலபமாகவும் மேற்கொள்ளக்கூடிய எந்த நடவடிக்கையையும் ஆரம்பிக்க வசதி பெற்றிருக்கிறார்கள்.

ரைன் நதிக்கும் அதற்குச் செல்லும் மார்க்கங்களிலும் நடைபெற்ற நடவடிக்கையில் அமெரிக்க, பிரிடிஷ் டாக்டிகல் விமானப் படைகள் மேற்குப் போர் முனையில் மட்டும் 119 பாலங்களை அழித்திருக்கின்றன அல்லது நாசமாக்கியிருக்கின்றன. ரைன் நதியில் பானுக்கும், வெசலுக்கும் மத்தியில் அநேக இருப்புப் பாதை, ரஸ்தா அல்லது இரண்டும் அமைக்கப்பட்ட பாலங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் உதைபட்ட ஜெர்மன் டிவிஷன்களுக்கு அதிக சஞ்சலமேற்பட்டது.

ஜெர்மானியர்கள் தானகவே பாலங்களை அழிக்கும் சமயங்களில் அவர்கள் ஆயத்தம் செய்வதை விமானத் தாக்குதல் கெடுத்துவிடுகின்றன. நவீன முறையில் கட்டப்பட்ட ஒரு பாலத்தை நாசவேலை செய்யும் படை அழிப்பதென்றால் அதற்கு டன்கள் கணக்கான வெடி மருந்துகள் தேவைப்படும். போரின் ஒரு கட்டத்தில் பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப் படையைச் சேர்ந்த மிச்சல் விமானங்கள் மேகங்கள் வழியாக கருவிகளின் உதவி கொண்டு மார்ச்சு மாதம் 5-ம் தேதியன்று 15 நிமிஷ கால அளவில் நாள் பூராவாகவும் வெசலிலுள்ள இரண்டு ரஸ்தா இருப்புப் பாதை சந்திக்கும் இடங்களில் 170 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கின்றன.

போக்குவரத்து லக்ஷியங்களும் விரிவான முறையிலும் கவனிக்கக்கூடிய முறையிலும் தாக்கப்பட்டிருக்கின்றன. பானுக்கும் ஆரன்ஹிமுக்கு மத்தியிலும் ரைன் நதிக் கரையிலும் மன்ஸ்டர் வரையிலுமுள்ள பிரதேசத்தில் ஜெர்மனியை நோக்கி முன்னேறும் படைகளை பிரிடிஷ் அமெரிக்க வெடி விமானங்கள் பலமாகத் தாக்கியிருக்கின்றன.

கவசம் பூண்ட சேனை பின்வாங்குவதிலுள்ள சிரமங்களைப் பற்றி புள்ளி விவரங்கள் கிடைத்திருக்கின்றன. மார்ச்சு 3-ம் தேதியன்று நேசதேச டாக்டிகல் விமானப் படைக்குக் கீழ்கண்ட லாபங்கள் கிடைத்தன.

| | நாசமானது. | பழுதுபட்டது. |
|---|---|---|
| சாமான் மோட்டார் வண்டிகள் | 301 | 281 |
| கவசம் பூண்ட வண்டிகள். | 23 | 37 |
| குதிரை பூட்டிய வண்டிகள். | 42 | 12 |

ஒரே தினத்தில் 54 குதிரை பூட்டிய வண்டிகள் தாக்கும் லக்ஷியமாக இருந்தனவென்பது எதிரிக்குப் போக்குவரத்து சிரமங்கள் அதிகரித்துவிட்டன என்பதை வெளிப்படுத்துகிறது.

இருப்புப் பாதை போக்குவரத்தும் அழிக்கப்பட்டது. ரைன் நதிக்கு இரு பக்கத்திலுமுள்ள இருப்புப் பாதைகள் பல இடங்களில் துணிக்கப்பட்டபடியால் எதிரிப் படைகளை திருத்தியமைத்துக்கொள்ள முடியவில்லை. மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று 53 எஞ்சின்கள் அழிக்கப்பட்டன, 24 பழுதுபடுத்தப்பட்டன, 519 ரயில் வண்டிகள் அழிக்கப்பட்டன, 853 வண்டிகள் பழுதுபடுத்தப்பட்டன.

சண்டை வெடி விமானங்கள் இருப்புப் பாதைகளை துண்டிப்பதில் அநேக காலமாக விசேஷப் பயிற்சி பெற்றிருக்கின்றன. ஆகையால் பழுதுபட்ட பாதைகளைத் துரிதமாகப் பழுது பார்க்க எதிரி ஏற்பாடு செய்திருந்த முதல் தரமான ஸ்தாபனமும் அநேக சிரமங்களை அனுபவிக்க நேரிட்டது. அவர்களுடைய வேலையையும் அவர்கள் செய்யக்கூடவில்லை. பிப்ரவரி மாதத்தில் மட்டும் போர் முனையிலுள்ள இருப்புப் பாதைகள் 2,500 இடங்களில் துணிக்கப்பட்டன. ஒரு வாரத்தில் 1,200 இடங்களில் இருப்புப் பாதைகள் துணிக்கப்பட்டன.

இந்தப் பழுதுகள் துரிதமாகச் சீர்படுத்தப்படுகின்றன. ஆகிலும் அவைகள் ரெயில் வண்டிகள் தேக்கி விடுவதினால் விமானங்கள் தாழப் பறந்து செல்லுவதற்கு இலக்காகி விடுகின்றன. மார்ச்சு மாதம் 2-ம் தேதியன்று ரைன் நதியின் குறுக்கே மன்ஸடருக்கு அருகில் அமெரிக்க இரண்டாவது டாக்டிகல் விமானப் படை 10 ரயில் வண்டித் தொடர்களைத் தாக்கிற்று. அவுட் வாணங்களைப் போடும் டைபூன்கள் மேற்குமாகச் செல்லும் ரயில் வண்டிகளைத் தாக்கின.

சில இடங்களில் பீரங்கிகளுக்கு தினசரி குண்டுகள் எவ்வளவு என்று கணக்கிடப்பட்டு விட்டதென்று ஜெர்மன் கைதிகள் சொன்னார்கள். போக்குவரத்துக்களை அழித்ததுதான் இந்தப் பங்கீட்டுக்குக் காரணம்.

இரவு காலத்தில் நடவடிக்கையை மேற்கொண்டு எதிரி பின்வாங்கும்பொழுது ஏராளமான, படகுகளையும் இழுப்புப் படகுகளையும், தோணிகளையும் உபயோகித்து வந்தான். இவைகளையும் நாம் அலக்ஷியம் செய்யவில்லை. மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று நேசதேச விமானப் படை 40 படகுகளை அழித்திருக்கிறது, 29 படகுகளைப் பழுதுபடுத்தியிருக்கிறது.

தப்பி ஓடும் மார்க்கங்களையும் போக்குவரத்து சாதனங்களையும் இரக்கமன்னியில் அழித்துவரும் நடவடிக்கையைக்கண்டு ஜெர்மன் விமானப் படை என்ன செய்துவருகிறது. உபயோகமுள்ளதாக ஒன்றும் செய்யவில்லை. விமானச் சண்டையில் ஜெர்மன் விமானிகளின் அனுபவக் குறைவு ஒரு முக்கியமான அம்சமாகும். சமீப காலத்தில் நடைபெற்ற போரில் 40 ஜெர்மன் விமானங்கள் 24 நேசதேச விமானங்களை எதிர்த்தன. நேசதேசத்தார்களுக்கு நான்கு பங்கு வெற்றி கிடைத்தது.

மார்ச்சு மாதம் 1-ம் தேதியன்று பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப் படையுடன் ஒத்துழைக்கும் கனடியப் படையின் தலைவர் ஒரே தாக்குதலில் எதிரியின் மூன்று சண்டை விமானங்களை அழித்துவிட்டார். இத்துடன் அவர் 300 விமானங்களை அழித்திருக்கிறார்.

எதிரிகளின் முன்னணி தளங்களை ஆரம்ப காலத்தில் நொருக்கிவந்த பிரிடிஷ் பாம்பர் படையின் நடவடிக்கைக்கு இப்பொழுது விசேஷமான பலன் கிடைத்துவிட்டது. பிப்ரவரி 7, 8-ம் தேதியன்று கனடிய சேனைகள் தாக்க ஆரம்பித்தன. கொக்கிலும், க்ளூவ்ஸிலும் 1,800 டன்கள் மொத்த எடையுள்ள குண்டுகள் ஒரே தாக்குதலில் வீசப்பட்டிருக்கின்றன. அதன் பின் வெசலின் குறுகிய இருப்புப் பாதை பிரதேசத்தில் 400, 650, 700 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகள் மூன்று தாக்குதல்களில் வீசப்பட்டன.

ரைன் நதி மேற்குப் பக்கத்தில் பின் சென்றுகொண்டே போர் புரியும் ஜெர்மன் சேனையை குறுகலான மார்க்கமாகச் செல்ல அனுமதிக்கும் முறையில் கதவைத் திறந்து வைத்திருக்கும் ஒருவருக்கு ஒப்பிடலாம். இந்த சமயத்தில் நேசதேச விமானப் படைகள் கதவைத் திறந்து வைத்திருக்கும் கையைத் தளர்ச்சி செய்வதுடன் அதிலிருந்து செல்லும் மார்க்கத்தை சற்று தூரத்தில் அடைத்து வருகிறார்களென்றும் சொல்லவேண்டும்.

# ஜெர்மன் யுத்த சக்தியை நேசதேசத்தார்கள் அழித்துவருகிறார்கள்.

## விமான நடவடிக்கையின் விளைவு.

(டெயிலி டெலகிராப்)

“காலநிலையில் சௌகரிய மேற்பட்டால் இப்பொழுது நாம் ஆரம்பித்திருக்கும் தாக்குதல் ரைன்நதிக்கு மேற்குப்பக்கத்திலுள்ள ஜெர்மன் படைகளை நிர்மூலமாக்கிவிடும்” என்று ஜெனரல் ஈசன் ஹவர் சொன்னார். வடக்கு ஐரோப்பிய வசந்தகாலத்தைப்போல பருவகாலம் விமானப்படைகளை ஏமாற்றி விடுகிறது. ஆகிலும் பருவகாலம் நேசதேச விமான நடவடிக்கைக்கு போதிய அளவு சௌகரியமளித்திருக்கிறது. இரண்டு வாரங்களுக்குள் விமானப்படை 50,000 தடவை பாய்ந்து சென்றிருக்கின்றன. பருவகாலம் நிலையுள்ளதாக இல்லாத போதிலும் அமெரிக்க 8-வது விமானப்படை 14 நாட்களில் சேர்ந்தார்போல் ஜெர்மனியைத்தாக்க 1,000 கனமான வெடிவிமானங்களை அனுப்பியிருக்கிறது. இவ்விதமாக நேசதேசப்படையின் முன்னேற்றம் திட்டப்படி துரிதமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

15-வது ஜெர்மன் சேனையும், ஜெர்மனியின் 1-வது குடைத்துருப்பும் முடமாகக்கப்பட்டு விட்டன. ஜெனரல் கிரேராரும், ஜெனரல் ஸிம்ப்ஸனும், ஜெனரல் ஹாட்ஜாஸும் 58,000 ஜெர்மானியர்களைக் கைது செய்திருக்கிறார்கள். மாஸ் நதிக்கும் ரைன் நதிக்கும் மத்தியில் எதிரி ஏராளமான மனிதர்களையும் யுத்த தளவாடங்களையும் இழந்துவிட்டான். நேசதேச விமானப்படையும் பீரங்கிகளும் ரைன் நதியைத் தாண்டிச்செல்லப்போகும் போக்குவரத்து வாஹனங்கள் செல்லும் ரஸ்தாக்கள் பேரில் வெடிகுண்டுகளைப்போடுகின்றன. எடுத்துச்செல்லமுடியாத சாமான்களையும் கட்டடங்களையும் ஜெர்மானியர்கள் தீ வைத்து நொருக்கி வருகிறார்கள். ரைன் நதியைத்தாண்டி எவ்வளவு தளவாடங்களையும் எவ்வளவு ஸோல்ஜர்களையும் ரூண்ட்ஸ்டெட் கொண்டுபோகக்கூடுமென்பது காலநிலைமைப் பொருத்தது. நேசதேச விமானப்படை இடைவிடாது தாக்கிவந்தால் அவன் ஒன்றையும் காப்பாற்றிவரமுடியாது. புயலும், மேகமும் பாலங்களையும் படகுகளையும் ரக்ஷித்துவந்தாலும், எஞ்சியுள்ள துருப்புகள் கிரேபல்டுக்கு வடக்கில் போர்புரிந்த படைகளைப்போல் கோரமாகப் போர்களை நடத்தினாலும், நஷ்ட ஈடு செய்ய முடியாத சிறந்த துருப்புகளையும் அநேகக் காலாட்படைகளையும் ஜெர்மனி இழந்துவிட்டது. நேசதேச முன்னேற்றம் தடுக்க முடியாததென்றும் ஜெர்மானியர் கண்டுபிடித்துவிட்டார்கள்.

“கிழக்கு நோக்கிச் செல்ல முயன்றால் உடன் காலத்தில் மரணத்தை அடையும் அபாயத்துக்கு உட்படுவீர்கள்” என்று ரைன் நதிக்குமேற்குப்பக்கத்திலுள்ள ஜெர்மன் ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் ஜெனரல் ஈசன்ஹவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். “நீங்கள் ஜெர்மன் ஸோல்ஜர்களிடம் இனிமேல் போரை நடத்துவது உபயோகமற்றது என்று வற்புறுத்த முடியாவிடில் நீங்கள் ரத்த வெள்ளத்தில் உழன்று மாண்டுபோகும்படி நேரிடும்” என்று அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார். சேனைகள் யாதொரு போரன்னியிலும் கைவிட்டுச் சென்ற மகத்தான தொழிற்சாலைகளுள்ள நகரங்களிலிருக்கும் லக்ஷக்கணக்கான பொது மக்கள் நேசதேசக் கம்மாண்டரின் புத்திமதியை எதிர்பார்த்து பிறருக்கு படிப்பினை காட்டும் முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மனி எவ்வளவு காலம் எதிர்த்துப் போராடுமென்பது நமது விமான நடவடிக்கையைப்பொருத்தது. விமான நடவடிக்கையின் விளைவைப்பற்றி கோயபல்ஸ் பின்வருமாறு சொல்லியிருக்கிறான் “விமானத் தாக்குதல் பொருக்கக்கூடாத நிலைமையை அடைந்துவிட்டது என்று அவன் சொல்லுகிறான். யுத்த தளவாட உற்பத்தியும் படைகளைச் சலனம் செய்வதும் விசேஷமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. ரைன்லாந்திலுள்ள நகரங்களிலுள்ள தொழிற்சாலை பிரதேசங்கள் பாழாகிவிட்டன. விமான நடவடிக்கை பலமாகவும் இடைவிடாதும் நடைபெற்றால் இதைப்போன்ற விளைவுகள் ஏற்படுவது நிச்சயம். விமானப்படைகள் செல்லும் தூரமும், வெடிகுண்டுகளின் சங்கியையும் இந்த வருஷத்தில் அதிகரித்து விட்டபோதிலும், இன்னும் பூர்ணமான அபிவிருத்தியை அடையவில்லை.

ஸ்ட்ராடஜிக் வெடிகுண்டுவீச்சு அதிகரித்திருக்கும்பொழுது, கனமான நெடுந்தூரம் செல்லும் வெடிவிமானங்களும் டாக்டிகல் முறையில் தரைப்படைகளுடன் நெருங்கி ஒத்துழைத்து வருகின்றன. எதிரியின் படைவரிசைகளுக்குப்பின்னால் உள்ள போக்குவரத்துகள் சீர்கெட்டுப்போய்விட்டன. ஸர்பராக்களை எதிரி பெற்றுவந்த மூலாதாரங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. ஜெர்மனியின் யுத்த சக்தியை அழிக்கும் நடவடிக்கை அதிகரித்து வருகிறது.

# முன்னணி விமான தளங்களை அமைக்கிறார்கள்.

## பிரிடிஷ் விமானப்படை அட்டவணைப்படி தளத்துக்கு வந்துவிடும்.

### மேஜர் ஜான் நார்த்.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்திய பிரிடிஷ் யுத்த நிலமை மறைந்து 1943-ம் வருஷம் ஜூலைமாதத்தில் வடக்கு ஆபிரிக்காவிலுள்ள நேசதேசப்படை தலைமை காரியாலயம் மேன்மையுடனிருந்தது என்று அவர் எழுதுகிறார்.

எல்லாப் போர்முனைகளிலும் படைகள் முன்னேறும்பொழுது முன்னேறுவதற்கு முன்னும் பிரிடிஷ் சேனை, விமானப்படை நடவடிக்கைத் தகுதியான விமான தளங்களை அமைத்துவருகிறது.

போர்முனைக்கு விமானப்படை உபயோகமுள்ள வகையில் ரக்ஷணையளிக்கவேண்டுமானால் லக்ஷியத்தின் பேரில் போதுமான காலம் நிலைபெற்றுத் தாக்கவேண்டுமானால், விமானங்கள் புறப்படும் தளம், லக்ஷியத்திலிருந்து 100 மைல்களுக்குள் சௌகரியமான நிலமை இருந்தால், எதிரியின் பீரங்கி குண்டுவீச்சு வட்டாரத்தைத்தாண்டி அமைக்கப்பட்டிருக்கும்.

இந்த தளங்களை அமைப்பது என்பது மிகவும் சிரமசாத்தியமான காரியம். அநேக சமயங்களில் எதிரியின் குண்டு வீச்சுக்குட்பட்டு இந்த வேலை நடைபெற வேண்டும். அதில் ஈடுபட்டிருப்பவர் தரைப்படைகளின் தாக்குதலை சமாளித்து நிற்கவேண்டும. முன்னணியில் செல்லும் டாங்கிப் படைகளுக்குப் பின்னால் நிர்வாகப்படைக்குமுன் சாமான் வண்டிகளை அமைக்கத் தயாராக இருக்கவேண்டும். அவ்விதம் செய்தால்தான் ஸங்கேதஸ்தானத்தை அடைந்தபின் படைகள் உத்தரவுகளைப் பெற வசதி ஏற்படும்.

பிரிடிஷ் சேனையில் இந்த வேலையை பிரிடிஷ் இஞ்ஜினியர்களைச் சேர்ந்த விமானங்களை அமைக்கும் படைகள் செய்து வருகின்றன. நார்மண்டியிலிருந்து ஹாலந்து வரையில் படைகள் வெகு வேகமாக முன்னேறிய பொழுதுங்கூட பிரிடிஷ் விமானப்படை ஒரு நாளைக்குமேல் முன்னணித் துருப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளாமலிருந்த தில்லை.

விமான தளத்தை அமைக்கும் படையில் நூற்றுக்கணக்கான ஆபீஸர்களும், மனிதர்களும், ஏராளமான வண்டிகளும் இருக்கின்றன. அதன் சாமான்களைக் கொண்டுபோக ஏராளமான வண்டிகளும் தேவைப்படும். பூமியைத்தோண்டும் ஆயுதங்களும் பெரிய ரஸ்தா ரோலர்களும் இந்தப்படையுடன் எடுத்துச் செல்லப்படும். இந்தப்படையில் பிரிடிஷ் இஞ்ஜினியர்களைச்சேர்ந்த ரஸ்தா அமைப்பு கம்பெனிகளும், பயனீர் கோஷ்டிகளும், வெடி குண்டுகளை அகற்றும் பகுதியும் இருக்கும். இவ்விதமாக விமான தள அமைப்பில் அது ஈடுபடாத சமயத்தில் அது போக்குவரத்து மார்க்கங்களில் சேவைக்குச்செல்லும். ஓடும் வழிகளிலுள்ள விமான தளத்தை அமைப்பதற்கு 800 முதல் 5000 டன்கள் சாமான்கள் பூப்பிரதேச அமைப்புக்குத் தகுந்தபடி தேவைப்படும். அசைந்துகொடுப்பதற்காக விசேஷமான முஸ்தீப்புகளும், சாமான்களும் சேனைகளைப்போல அத்துடன் குவித்து வைக்கப்படும். விமான தளத்தை அமைக்கும் கோஷ்டிகள் A. G. R. E-இன் கமாண்டுக்குட்பட்டவர்கள். கமாண்டருக்கு "காகர்" என்று பெயர் வழங்கப்படும்.

படைகள் முன்னேறும்பொழுது, இந்த கோஷ்டிகள் சேனைக்காரியாலயத்தின்மூலம் முன்னணிப்படைகளுடன் சேர்க்கப்படுவார்கள். அதன் கமாண்டர் ஸீனியர் விமானப்படை ஆபீஸருடன் ஆலோசனை செய்வார். தேவைகளைப் பெறுவார். போர்முனையின் நிலமையை ஆராய்ச்சிசெய்வார், அது நிகுதியற்றதாக இருந்தால் ஒரு திட்டத்தை நிறுவுவார். திட்டம் போட முடியாவிட்டால் அவர் கவசம்பூண்ட மோட்டார்களில் செல்லும் வேவுபார்க்கும் கோஷ்டியுடனும் ஆராய்ச்சிசெல்லப் புறப்படுவார். வழக்கம்போல் காகரையும் அல்லது சேனைத்தலைமை காரியாலயத்திலுள்ள சீப் இஞ்ஜினியரையும் கலந்தபின் இந்த இஞ்ஜினியர் ஆபீஸர் சிலாக்கியமான ஸ்தலங்களைப் பொருக்கி எடுப்பார். பிரிடிஷ் விமானப்படை

அவைகளிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்கும். விமானங்கள் வருவதற்கு ஒரு தேதியும் குறிப்பிடப்படும்.

பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து முதலிய இடங்களில் நடைபெற்ற நடவடிக்கைகளில் பிரதேச சம்பந்தமான கிரமங்கள் எவ்விதமிருந்தாலும் இந்த தேதிகளில் சரியானபடி விமானங்கள் வந்ததுமட்டுமில்லாமல், தேதிக்கு முன்னதாகவே விமான தளங்களும் அமைக்கப்பட்டுவிட்டன. விமானப்படையில் முதல் பகுதி வரும்முன்னரே பிரான்ஸில் 16 விமான தளங்கள் அமைக்கப்பட்டன.

பிரிடிஷ் சேனை விமான தளங்களை துரிதமாக அமைப்பதற்கு நார்மண்டி அதிக வசதியை அளித்ததினால்தான் பிரான்ஸில் படையெடுப்பதற்கு கடற்கரையின் அந்த பாகத்தைப் பொருக்கியெடுத்தார்கள். விமானப்படைகள் இறங்குவதற்கு ஒரு தளம் D-தினத்தன்றே தயாராக இருந்தது. D-தினத்திற்கு மறுநாள் விமானதளம் அமைக்கும் கோஷ்டிகள் எதிரியின் கோட்டையிலிருந்து வரும் வெடிகுண்டுகளையும் பொருட்படுத்தாமல் தளங்களில் வேலை செய்துவந்தார்கள். D-தினத்துக்கு நாலாவதுநாளன்று ஒரு விமானம் தளத்தில் இறங்கிவிட்டது. அப்பொழுதும் எதிரிகள் மோர்டார் குண்டுகளை வீசிவந்தார்கள். 8-வது நாளன்று விமானங்கள் இறங்குவதற்கு 8 ஸ்தலங்கள் தயாராகிவிட்டன. சிலவற்றில் ஓடுபாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் 400 டன்கள் எடையுள்ள தளவாடங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த வேலை பூராவும் போக்குவரத்திலுள்ள மகத்தான சிரமங்களுடனும், குறுகலான முன்னேறும் வாசலிலுள்ள நிலைமையுடனும் பூர்த்திசெய்யப்பட்டது. விமான நிலையங்களை அமைத்தபின் அமைப்பு கோஷ்டிகள் ரஸ்தாக்களைப் போடுவதில் ஈடுபட்டன, விமானதளங்களுக்குச் செல்லும் ரஸ்தாக்களை அமைப்பதுடன் அவர்கள் 20 மைல்கள் நீளமுள்ள ரஸ்தாக்களையும் அமைத்தார்கள். அவைகள் ஆரம்பத்தில் கெட்டிப்படாத ரஸ்தாக்களாக இருந்திருந்தன.

ஒரு விமானதளத்துக்கு 4,00,000 சதுர கஜங்கள் மண் பரப்பப்படவேண்டும் என்றும் அவற்றில் 1,80,000 சதுர கஜங்கள் மண் விமானம் ஓடும் மார்க்கங்களுக்குச் கெட்டியா இருக்கவேண்டுமென்று மதித்தால், இந்த வேலைக்கு எவ்வளவு பரிசிரமம் வேண்டுமென்பதை நாம் அறியலாம். நடவடிக்கையின் பிற்பகுதியில் பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய ஹெஸ்ஸியான் பாப்பைச் சரியண்ண உபயோகப்படுத்தப்பட்டது. ஏனெனில் அந்த ஹெஸ்ஸியானின் பாகங்கள் ஒன்றுக்கொன்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிடுமாதலால் ஓடும் வழி பூராவும் ஜலம் தேங்காமல் அவைகள் பாதுகாத்து வந்தன.

இவ்விதமாக அமைக்கப்பட்ட ஓடும் வழியிலுள்ள பூமி கெட்டியாகவும் கனமான மழை பெய்தாலும் உலர்ந்தும் இருக்கும். நார்மண்டியில் இந்த முறை கையாளப்படவில்லை. ஏனெனில் அங்கு உபயோகப்படுத்த பிரெஞ்சு கன்னம்புக்கட்டி எதிரிகளுக்கு நல்ல இலக்குகளாகத் தோன்றிவிடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் ஜெர்மன் விமானப்படை தலைகாட்டாதபொழுது இந்த ஆக்ஷேபனையும் ஒய்ந்துவிட்டது.

நார்மண்டியில் ராணுவ நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்ற போதிலும் அந்த நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு அறுவடை செய்ய அவகாசம் அளிக்கப்பட்டபின்தான் அந்த நிலங்களிலுள்ள மண்ணை யந்திரங்கள் தோண்டி எடுக்க ஆரம்பித்தன. இந்த யந்திரங்களை உபயோகிக்குமுன் நிலச்சுவான்தாருக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் அதற்காக அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பொருளையும் நிர்தாரணம் செய்ய பொதுஜன பிரதிநிதிகள் அங்கு வந்து விட்டார்கள். இதற்கு பதிலாக விமான தள அமைப்பு கோஷ்டிக்கு அபாரமான உதவி உள்நாட்டிலுள்ள பிரெஞ்சுப் படைகளிடமிருந்து ரக்ஷணை மூலம் கிடைத்ததுடன், ஆங்காங்குள்ள பலவேறு இலாக்காக்களின் பாண்ட்ஸ் எட்சாஸிஸம் பேருதவி செய்து வந்தார்கள். அவர்கள் யந்திர சாதனங்களையும், தொழிலாளர்களையும் கொடுத்ததுடன், பூர்த்தியடைந்த விமான தளங்களைப் பரிபாலித்துவர அநேக கோஷ்டிகளையும் அனுப்பி வந்தாகள்.

எல் அலாமின் போரிலிருந்தே போதுமான விமான ரக்ஷணையன்னியில் ஒரு கஜம்கூட முன்னேறும் நிலமை பிரிடிஷ் சோல்ஜருக்கு ஏற்படவில்லை. உண்மையில் பூர்ணமான

விமான ஆதிக்கத்தினால் ஏற்படக்கூடிய இலாக்ஷியமான விமான ரக்ஷணை அவனுக்குக் கிடைத்தது. எந்த பிரதேசத்தில் மூன்று வருஷங்களுக்குமுன் ஜெர்மன் விமானப்படை ஆதிக்கம் பெற்றிருந்ததோ, 1940-ம் வருஷத்தில் விமான ரக்ஷணையுடன் பிரான்ஸிலும், பெல்ஜியத்திலுள்ள ஜெர்மன் படைகள் இங்கிலீஷ் கால்வாயின் கடற்கரைக்குச் சென்றனவோ அதே இடத்தில் பிரிடிஷ விமானப்படை ஆதிக்கம் பெற்றுவிட்டது.

விமான தளத்தை அமைக்கும் கோஷ்டிகளுள்பட சேனையும் போர்முனையில் அதற்கு உத்தமபக்ஷமான உதவியளித்துவரும் விமானப்படைக்கு ஒத்தாசை செய்துவந்ததென்பது திருப்திகரமானது.

---

# தூரக்கிழக்குப் போரில் பஸிபிக் கடற்படையின் பங்கு.

---

## எதிரியின் கடற்படையின் தேய்வு.

சமீப காலத்தில் வாஷிங்டனுக்கு விஜயம் செய்த கடற்தளபதி நிமிட்ஸுக்கும், அமெரிக்க கடற்படை இலாகாவுக்கும் நடைபெற்ற சம்பாஷணைகளில் பிரிடிஷ் பஸிபிக் கடற்படையின் வேலையும், உண்மையை அறியாத நிருபர்களின் விஷமமான அறிக்கைகளும் சர்ச்சை செய்யப்பட்டனவென்று டெயிலி டெலகிராபின் கடற்படை நிருபரான கமாண்டர் கென்னத் எட்வார்ட்ஸ் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடற்படையின் அமைப்பைப்பற்றி அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆகிலும் அதைச்சேர்ந்த கப்பல்களுடையவும், பீரங்கிகளுடையவும் அளவைக்கொண்டு அதன் முக்கியத்வத்தை மதித்து விடமுடியாது. அது தூரகிழக்குப் போரில் எவ்விதமான பங்கெடுத்துக் கொள்ளும் என்பதைப் பொருத்துத்தான் அதன் முக்கியத்வம் மதிக்கப்பட வேண்டும்.

பிரிடிஷாரின் பஸிபிக்கடற்படை அமைக்கப்படும் வரையில் கடற்தளபதி நிமிட்ஸும், ஜெனரல் மாக்ஆர்தரும் நேர் மேற்குமுகமாகத் தாக்கிவந்தார்கள். அதற்குப்பின் அவர்கள் வட கிழக்கை நோக்கி முன்னேறிவருகிறார்கள்.

கடற்தளபதி நிமிட்ஸின் படைகள் டோக்கியோ பேரில் சஞ்சாரம் செய்து வால்கேனோ தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த ஐவோஜிமாவில் இருவகைப்பட்ட நடவடிக்கையை ஆரம்பித்து விட்டன. ஜெனரல் மாக்ஆர்தரின் படைகள் வடகிழக்கில் பிலிபைன்ஸில் வெற்றிகரமாக நடவடிக்கைகளை நடத்திவிட்டன.

சிங்கப்பூரிலும், டச்சுக் கிழக்கிந்திய பிராந்தியங்களிலும் பலமான ஜப்பானியப் படைகள் இருந்து வந்ததினால், அமெரிக்கப்படைகள் வடமேற்கு நோக்கி முன்னேறியதிலிருந்து அப்படைகளின் தெற்கு மார்க்கம் பிரிடிஷ் கடற்படை இல்லாவிடில் எதிரியின் அபாயத்துக்குட்பட்டிருக்கும். பிரிடிஷ் கடற்படையின் ரக்ஷணையில்லாவிடில் அமெரிக்கப்படைகளின் நடவடிக்கைகள் கெட்ட நடவடிக்கைகளாக இருந்திருக்கும்.

பிரிடிஷ் கடற்படை பஸிபிக்கில் பேருக்குமட்டில் இருந்து வருகிறதென்று நினைக்க வேண்டாம். பிரிடிஷ் நீர் மூழ்கிகள் எதிரியின் கடற்படையை மேல் மேலும் அழித்து வருகின்றன. ரியர் அட்மிரல் விமானிடமுள்ள நான்கு பெரிய விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் சுமத்திராவில் பாலம்பாங்கிலுள்ள ஜப்பானின் எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகளைத் தாக்கியதையும் நாம் மறந்து விடக்கூடாது.

பிரிடிஷ யுத்தக்கப்பல்கள் பஸிபிக்கடல் போருக்கு லாயக்கில்லாதவைகள் என்று சொல்வது பழங்கதையானது. பிரிடிஷ் கடற்படை சக்தி உலகமளாவிட்டது. அசைந்து கொடுக்கும சக்தி பெற்றது. எல்லா சமுத்திரங்களில் சஞ்சாரம் செய்யும்படியாக பிரிடிஷ் கப்பல்

கள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் வெகு சீக்கிரத்தில் ஆர்டிக்கிலிருந்து உஷ்ணரேகை பிரதேசத்துக்குக் கப்பல்களை அனுப்பக்கூடும். உலகததிலுள்ள மற்ற கடற்படைகளுக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதென்று சொல்லுவதற்கில்லை.

---

# பர்மாவில் யுத்த நிலமை தலைகீழாக மாறிவிட்டது.

## ஜப்பானின் தவறான மதிப்புகள்.

(கிளாஸ்கோ ஹெரால்ட்).

ஒரு வருஷத்துக்குமுன் உலக யுத்தத்தில் சிண்ட்ரல்லா போலிருந்த ராணுவ நடவடிக்கைகள் சென்ற சில மாதங்களில் விசேஷ மாறுதல்களை அடைந்திருக்கின்றன. இறந்துபோன பிரிகேடியர் வின் கேட்டின் சிறந்த நூதனமான முறைகளை ஜெனரல்ஸ்லிம் கையாண்டு பூர்த்தி செய்ததில் ராணுவ நிலமை தலைகீழாக மாறிவிட்டது. பர்மா விளைபொருள்களுக்கும் இந்தியாவுக்குச் செல்லபாய்ச்சல் ஸ்தலம் போன்றதென்றும் ஜப்பானியர்கள் அதை மதித்து வந்தார்கள். இந்தியாவும் ஆசியாவின் விடுதலைக்காகப் போர்புரியும் தேசத்துடன் சேரக் கிளர்ச்சி செய்யும் என்று ஜப்பான் எண்ணியிருந்தது. அதற்கு எதிர்முறையாக சம்பவங்கள் நேரிட்டன. பர்மாவில் முன்னேறிவரும் நேசதேசப்படையில் பெரும்பாலும் இந்தியத் துருப்புகள் இருக்கின்றன. அவர்கள் எதிரியின் மலைப்பாங்கான வடக்கு பிரதேசத்தில் தீரத்துடன் போர் புரிந்திருக்கிறார்கள். மாண்டலேக்கும் ரெங்கூனுக்கும் மத்தியிலுள்ள இருப்புப்பதை, நதி மார்க்கங்களையும் அவர்கள் துணித்து விட்டார்கள்.

ஜப்பானியர்களும் நன்றாய் போர் புரிந்தார்கள். மூன்று வருஷங்களுக்குமுன் ஜாக்கிரதையுள்ள திட்டத்துடனும் முன்கூடிய ஏற்பாட்டுடனும் ஜப்பான் கிழக்கு இந்திஸிலும், தெற்கு பஸிபிக்கிலும் ஆரம்பகாலத்தில் நடத்திய போருக்கும் தற்போதிய நடவடிக்கைகளுக்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. யுத்தத்துக்குப்பின் டோக்கியோவின் ராணுவ ரகசியங்கள் வெளிவருமுன் நமக்கு உண்மைகள் வெளிப்படாது. இதற்கு இரண்டு சமாதானங்களைச் சொல்லாம். பிரிட்டனிடம் பதில் தாக்குதலைச் செய்யப் போதுமான சக்தியிருக்கிறதென்று எதிரி நம்பவில்லை. பெர்ல் துறைமுக நஷ்டத்துக்குப்பின் நூதனமாக பலம் பெற்று மேற்கு நாடுகளிலும் அலூஷியன் தீவுகளிலும் தற்காப்புப் போரை நடத்துவதை நிறுத்தி பஸிபிக்கில் அமெரிக்கா முன்னேறித்தாக்குமென்றும் ஜப்பான் எண்ணியிருக்கவில்லை.

இரண்டு எண்ணங்களும் தவறானவை. அவைகளை அடிப்படையாகக்கொண்டு ஜப்பான் சக்திக்கு மீறி விஸ்தாரமாகத் தாக்கும்படிக்கும் ஏராளமான தேசங்களைப் பிடிக்கும்படிக்கும் நேரிட்டது. அதன் பின் அவர்கள் இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் படையெடுத்து விடுவதென்றுகூட மனோராஜ்யம் செய்தார்கள். அப்பொழுதுதான் நியூகினியாவில் சமாளித்து நிற்கமுடியவில்லை என்ற எண்ணம் அவர்களுக்கு உதித்தது. இப்பொழுது ஜப்பான் பர்மாவிலிருந்தே துரத்தியடிக்கப்படுகிறது. எதிரி ஒரு குறிப்பிட்ட லக்ஷியத்தில் பூராகவனத்தையும் செலுத்தியிருந்தால் அவர்கள் வேறுவிதமான ஸ்திதியிலிருந்திருப்பார்கள். ஆனால் எதிரிகளின் பலத்தைச் சரியாக மதிக்காத ஒரு தவறை அவர்கள் செய்துவிட்டார்கள். அதற்கு சிக்ஷையாக அவர்கள் அக்கிரமமாக சம்பாதித்த லாபங்களை இழக்க நேரிட்டதுடன் தாய்நாட்டிற்கும் அபாயம் ஏற்படக்கூடிய பீதிக்குட்பட்டுவிட்டார்கள். தாக்குதலுக்குட்படாது என்று நினைத்த ஜப்பான் பேரில் நேசதேச விமானங்கள் கடல் மூலமான படையெடுப்புக்குமுன்னதாக ஆகாயமூலம் வெடிகுண்டுகளை வீசி வருகின்றன.

---

# சரித்திரத்திலேயே பெரிய கொள்ளைக்காரர்கள்.

## ஆக்கிரமிப்பு நாடுகளை ஜப்பானியர்கள் சூன்யமாக்கிவிட்டார்கள்.

மூன்று வருஷங்களாக மணிலாவில் காவல் முகாமிலிருந்து இப்பொழுது விடுதலை பெற்றிருக்கும் ஸிட்னி மார்னிங் ஹெரால்ட்டின் யுத்த நிருபரான ஜாக் பேர்சிவர் எழுதுகிறார்.

ஜப்பானிய ஆக்கிரமணத்துக்குப்பின் பெரிய கிழக்கு ஆசியா ஸமக்ஷேம வட்டாரத்துக்குட்பட்ட நாடுகள் ஜப்பானின் சம ஏழ்மைத்தன வட்டாரத்தின் மெம்பர்களாகிவிட்டன.

கிழக்கு ஆசியா வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் வெட்டுக் கரையான் அரித்து விட்ட கட்டையைப்போலிருக்கிறது. வெளிப்படையாக அது கெட்டியான துண்டு போல் தோன்றுகிறது. ஆனால் பொருளாதார முறையில் அதை சோதித்தால் அது அப்படியே தூள்தூளாக நொருங்கி விடும்.

ஜப்பான் படையெடுத்த நாடுகளிலுள்ள சகல ஐஸ்வரியங்களையும் கொள்ளையடித்துவிட்டது. இதற்கு சமானமாக செங்கிஸ்கானின் நடவடிக்கையைத்தான் சொல்லலாம். ஜப்பானியர்கள் சரித்திரதிலேயே மிகப் பெரிய கொள்ளைக்காரர்களென்று வெளிப்படுத்திவிட்டார்கள். பெரிய சாமான்கள் முதல் அற்பமானவைகளையும் ஸ்வாபாகாரம் செய்துவிட்டார்கள். வெட்டுக்கிளியைப்போல அவர்கள் முதலில் செடியின் இலைகளை விழுங்கிவிட்டு, பின்பு செடியையும், அதன் பின் வேரையும் அழித்துவிட்டார்கள். ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் ஒரு திவிலைகூட உணவுப் பொருள் கிடையாது.

வாழைத்தோட்டம் மிகுதியாக உள்ள லூஸானில் சாதாரண வாழைப்பழம் ஒவ்வொன்று 15 ஷில்லிங்காகவும் நல்ல ஜாதிப் பழம் ஒன்று £ 1—17—6 ஆகவும் விற்கிறது. ஆரஞ்சு பழம் £ 3—15—0 முதல் £ 6—5—0 வரை விலையாக இருக்கிறது. வாத்து முட்டைகள் £ 2—15—0 ஆகவும், தேங்காய்கள் £ 1—3—0 ஆகவும் விற்கின்றன.

இவ்வளவு விலை கொடுத்தாலும் சாமான்கள் சுலபமாகக் கிடைப்பதில்லை. அரிசி 52—கிலோ மூட்டை ஒன்று 1250 பவுனாகவும், சர்க்கரை ஒரு கிலோ 31 பவுனாகவும் விற்கிறது. உல்லாசப் பொருள்களான சிகரெட் 30 அடங்கிய ஒரு பாகட் 3 பவுனாகவும், புகையிலை ராத்தல் 12 பவுனாகவும் விற்கிறது. சிற்றுண்டி சாலையில் சாதாரணச் சாப்பாடு 35 பவுனுக்கு வழங்கப்படும்.

ஒரு வருஷத்துக்கு மேலாக பிலிப்பைன்ஸிலும் அபாரமான செல்வம் பெருக்கமேற்பட்டிருக்கிறது. சனியன் முனையில் ஜப்பானியர்கள் முதலில் உள் நாட்டு செலாவணியும் ஜப்பானிய நாணயமும் சமமான பொருமானமுள்ளதென்று அமுல் நடத்தினார்கள். ஆகிலும் ஜப்பானிய வியாபாரிகளும் ஜப்பானிய சேனையிலுள்ள லாபக்கொள்ளை அடிப்பவர்களும் சேனையின் பொருளை நாட்டில் புகுத்த ஆரம்பித்தார்கள். ஜப்பானிய ராணுவ நோட்டுகளின் பொருமானம் ஒன்றுமில்லை என்று அறிந்து அவர்கள் ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஜனங்களுக்கு அநியாய அளவில் கடன் கொடுத்தார்கள். அதற்குப் பதிலாக யுத்தத்துக்குப்பின் அவர்கள் அமெரிக்க டாலர்களாகவும், ஸ்விஸ் பிராங்கிகளிலும் மற்ற நாணயங்களிலும் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்.

செலாவணியுள்ள பணம் ராணுவ நாணயம்தான். ஆகையால் ஜனங்கள் அதைக் கடனாக வாங்கினார்கள். அதன் பயனாக பிலிப்பைன்ஸிலுள்ள ராணுவபெசோ நாணயம் அமெரிக்க டாலருக்கு 2 ஆகஇருந்து 30-க்கு ஏறிவிட்டது.

ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள வீடுகளின் மேன்கூரையிலுள்ள தகரங்களும், தெருச் சாக்கடைகளில் மூடப்பட்டிருந்த இரும்புத் தகடுகளும், வீடுகளிலிருந்த அளவு கோல்களும், மின்சார பல்புகள் முதல் கை விளக்குகளிலுள்ள பாட்டரி உள்பட எல்லா மின்சார சாமான்களும், நகைகளும், கைக்கெடிகாரங்களும், சில்லரை ஆடைகளும், ஆபீஸ் சாமான்களும், படுக்கைகளும், வைத்திய ஆயுதங்களும், ஸப்ளைகளும், மோட்டார் வண்டிகளும், உதிரி பாகங்களும், பெட்ரோலும், எண்ணெயும், யந்திரங்களும், யந்திர சாமான்களும் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன.

பொது ஜன ஸ்தாபனங்களில் நிலக்கரி அகப்படாததால் வாயுவும் மின்சாரமும் உற்பத்தி செய்யக்கூடவில்லை. மரம் கிடைப்பதில்லை. ஏனென்றால் போக்குவரத்துகள் பூராவாக சீர்கெட்டுப்போய்விட்டன.

ஒவ்வொரு இரவிலும் சவங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் மணிலாத் தெருக்களில் சென்று வறுமையால் மாண்டுபோன நூற்றுக்கணக்கான ஆடவர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் எடுத்துச் சென்றன.

பெரிய கிழக்கு ஆசியா வட்டாரத்தைச் சேர்ந்த எல்லா தேசங்களுக்கும் நல்ல படிப்பினை ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானியர்கள் ஆதிக்கம் பெற போடப்பட்டிருக்கும் திட்டமும் அதன் விளைவுகளும் ஜப்பானியர்களின் சௌகரியத்துக்காகத்தான் என்றும் 1 மிலியன் கிழக்கு ஆசியா மக்கள் ஜப்பானிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயற்கைப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் சுதந்திரமளிப்பதாகச் சொல்லும் வாக்குறுதிகள் அடிமைத் தனத்துக்கான விலங்குகளென்ற உண்மையை ஜப்பானியர்களின் அகம்பாவம் மறைத்துவிடக்கூடவில்லை.

---

# உங்களுடைய எதிரியான ஜப்பானைப்பற்றி அறிந்துகொள்.

(லெப்டினண்ட் கர்னல் W. E. H. ஸ்டானர்).

(மதராஸ் யுத்த சஞ்சிகை.)

உங்களுடைய எதிரியைப் பற்றியும், அவனுடைய மனப்பான்மை, குணநிசயம், வலிமை, அவனுக்குள்ள குறைபாடுகள், அவனுக்குள்ள இயல்புகள் முதலியவற்றைப் பற்றியும் அவனுடைய யுத்த முறையிலிருந்து அறிந்து கொள்ளுவது நலம். ஆகிலும் அவனுடைய வீண் பீத்தல்களையும், பிரசாரத்தையும் நம் அறியவேண்டியதில்லை. அவனுடைய தன்மையை நாம் குறைத்துக்கூறக்கூடாது. மிகைப்படுத்தவும்கூடாது. ஆனால் புத்திகூர்மையுடன் நன்றாகவும் அதைப் பரிசீலனை செய்யவேண்டும். மூன்று வருஷயுத்த அனுபவத்திற்குப்பின் பஸிபிக்கிலுள்ள நாம் ஜப்பானியர்களை நன்கு அறிவோம். அவன் எப்பேர்பட்ட எதிரியாக மாறிவிட்டான்! எல்லாம் சமமாக இருக்கும் நிலமையில் ஜப்பானியர்கள் சிறந்த பிரிடிஷ், அமெரிக்கப்படைகளுக்கு இணையில்லாதவர்கள் என்று பஸிபிக்கில் போர் புரிகிறவர்கள் நிச்சயமாக நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை அவர்களுக்குப் பூர்ணமாக இருக்கிறது. ஆயுதங்களை உபயோகிப்பதிலும், போர் சாமர்த்தியத்திலும், யுத்த தந்திரத்திலும், திடத்திலும், கமாண்டர்கள், தலைவர்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் நாம் நிச்சயமாக மேற்போனவர்கள். இந்த வித்தியாசம் நிச்சயமாய் ஏற்பட்டிருக்கிறது.

பஸிபிக் போரைக்கவனித்தால் ஜப்பானியர்கள் உறுதியும், திறமையும், தைரியமும், சிறந்த ராணுவ சக்தியுமுள்ளவர்களென்று தெரியவருகிறது. எதிர்த்துத்தாக்கும் ஆர்வமும் அவர்களிடம் இருந்து வருகிறது. அவன் ஆடம்பரமில்லாதவன், செட்டானவன், அதிகாரிகளிடம் மரியாதை உள்ளவன், நல்ல ஒழுக்கமுள்ளவன், சுயமாக மிகுந்த தைரியமுள்ளவன், அவன் நல்லவன்தான். ஆனால் போதுமான அளவு நற்குணமில்லாதவன். அவனுடைய சேனையில் சில ஊழல்களிருக்கின்றன. அமைப்பு, பயிற்சி, மனப்பான்மை முதலியவற்றில் சேனை பலஹீனமானது. இந்த உண்மைகளை யுத்தம் வெளிப்படுத்தி விட்டது.

### குயுக்தியுள்ளவன், தந்திரசாலி.

பஸிபிக்கிலுள்ள நேசதேசப்படைகள் ஜப்பானியர்களுக்குத் தகுந்த சிக்ஷையை விதிக்கின்றன. சில துறைகளில் அவர்கள் நமக்கு சமமானவர்கள். ஆனால் எந்த அம்சத்திலும் அவர்கள் நம்மைவிட உயர்வானவர்களல்ல. அவர்களின் சில திட்டங்கள் மிகவும் சிறந்தவை. அவைகளின் சில முஸ்தீப்புகள் சிலாக்கியமானவை. ஆனால் எந்த அம்சத்திலும் நாம் அவர்களுக்கு மேற்போனவர்கள். அவர்கள் குயுக்தியுள்ளவர்கள், தந்திரசாலிகள், அவர்களின் போர்முனையில் எஞ்சினவர்கள் சாதாரணமானவர்கள் போலிருந்தாலும் சிறந்தவர்கள். பஸிபிக்கிலுள்ள அநேக தீவுகளில் ஜப்பானியர்கள் செய்திருக்கும் வேலையை நாம் சுலபமாக தாக்க முடியவில்லை. கடற்படை பீரங்கிகளும், வெடிகுண்டுகளும், உயர்தர வெடிகுண்டுகளும், எரிவெடிகளும் கட்டடங்களைத் துளைக்க முடியாது. தென்னைமரங்களாலும், பவழக்கொடியாலும் அவர்கள் தற்காப்புப் பெட்டிகளைக் கட்டியிருக்கிறார்கள். 25 ராத்தல் குண்டுகள் விழுந்தாலும் அவைகள் நொருங்கிவிடாது. அவைகளை ஒழிப்பதற்காக சமீபத்தில்

சென்றதில் அதிகமான உயிர்ச்சேதம் ஏற்பட்டது. ஜப்பானியர்கள் முன்னேறித் தாக்கத் தான் பயிற்சி பெற்றுர்களென்று நினைத்து தற்காப்பில் அவர்கள் சிறந்தவர்கள் அல்ல வென்று சொல்லப்பட்டது. இது தவறென்று இப்பொழுது வெளியாகிவிட்டது. அவர் களின் தற்காப்பு முறைகளும் சிலாக்கியமான ஏற்பாடாக அமைக்கப்பட்டவை.

தனிப்பட்ட ஸோல்ஜருக்கு அற்பமான தோற்றம்தான் புலப்படுகிறது. அமெரிக்கர் களும், ஆஸ்திரேலியர்களும பொதுப்படையான அபிப்பிராயங்களில் ஒன்றுபட்டிருக்கிறுர்கள். தனிமையில் இருந்தால் ஜப்பானியர்கள் பீதியடைவார்களென்றும் ஒன்று சேர்ந்திருந்தால் வலிமையும், தைரியமும் அவர்களிடம் காணப்படுகிறதென்றும் அவர்கள் நினைக்கிறுர்கள். சனியனை உபயோகிப்பதில் அவர்கள் நம்மைவிட இழிவானவர்கள்தான். தற்காப்பு ஸ்தானங் களை மறைமுகப்படுத்துவதிலும், புதர்களில் மறைந்து போர் புரிவதிலும், நடவடிக்கைகளில் திறமையுடன் போர் புரிவதிலும் ஜப்பானியர்கள் சிலாக்கியமானவர்கள். உயிரில்லாத பொம்மைகளை உபயோகிப்பதிலும், சத்தம் போடுவதிலும் அவர்கள் தந்திரசாலிகள். ஆனல் அந்த உபாயங்களைக்கொண்டே அவர்கள் சுலபமாக அகப்பட்டுக்கொள்ளுகிறுர்கள்.

## திடீர் தாக்குதல் அவனைக்கலக்குகிறது.

அவர்களின் ஆபீஸர்களும், கமிஷன்பெருத உத்தியோகஸ்தர்களும் இறந்துபோனலும் அல்லது முறியடிக்கப்பட்டாலும் அவர்கள் சிதறிப்போய் விடுவார்கள். அவர்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறது. பீதி அடைந்து அவர்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுகிறுர்கள். நமது படைகள் அவ்விதம் செய்வதில்லை. அவர்கள் அமைதியுடனிருந்து உயிரைக்காபந்து செய்து கொள்ளுகிறுர்கள். அமெரிக்க பிரிடிஷ் படைகளில் தலைமை வகிக்க எவராவது ஒருவர் முன்வந்து விடுவார். சிறந்த ஜப்பானிய ஸோல்ஜரும் குறுகிய, விரிவற்ற, ஊக்கமற்ற புத்தியுடையவன். அவன் தந்திரசாலியே ஒழிய சமயோஜித புத்தியில்லாதவன். அவனைத் திடீரென்று வளைத்துக்கொண்டால் அவன் கலங்கிவிடுவான். ஒரு குறிப்பிட்ட விதிகளின் படி நடக்கத்தான் அவன் பயில்விக்கப்பட்டிருக்கிறுன். அதிலிருந்து அவன் கொஞ்சம்கூட நழுவமாட்டான். ஒரு தவறை அவன் அடிக்கடி செய்து வருவான். யுத்தத்தில் இது நாசம் விளைவிக்கக்கூடியது. அவர்கள் தவறுதல்களை இடைவிடாது செய்வதைக்கண்டு நமது படைகள் அவர்களை முட்டாள்கள் என்று நினைத்து விடுகிறுர்கள். ஒரு தாக்குதல் பயன் படாத இடத்தில் அவர்கள் திருப்பித் திருப்பித் தாக்கிவருவார்கள். ஒரு திட்டம் தவறிப் போனல் அதைக் கைவிட்டுப்போட்டு மற்ற திட்டத்தைக் கையாளுவதற்கு அவர்களுக்கு மிகவும் சிரமசாத்தியமானது. பஸிபிக் போரில் அசைந்து கொடுக்கும் யுத்த தந்திரம்தான் சிறந்தது.

## இளப்பமான நிர்வாகம்.

அசைந்து செல்லும் நடவடிக்கையில் தகுதியான நிர்வாகம்தான் மிகவும் முக்கியமானது. நமது அனுமானப்படி ஜப்பானிய நிர்வாகம் இளப்பமானது. போர்முனைகளிலுள்ளபடை வரிசைகளுக்குப்பின் நாம் ஏராளமாக சர்பராக்கள், கைத்தொழில் படைகள், வைத்திய வசதிகள், போக்கு வரத்துகள், துருப்புகள் ஐகிக ஆமுஷ்மிக க்ஷேமத்திற்குறிய எற்பாடுகள் செய்து வருவது அனுவசியமற்றதில்லை. வீணனதில்லை. அனுவசியமான சிக்கலான நட வடிக்கையல்ல. நமதுவெற்றிக்கு அவைதான் முக்கிய காரணம். போரில் முடிவு ஏற்படுவதற்கு அபரிமிதமான மூலபலம்தான் அவசியம் என்ற மேற்கோள் தனிப்பட்ட ஸோல்ஜருக்கும் அன்வயிக்கும். அவனுடைய தேகஆரோக்கியமும், வலிமையும், மனஉறுதியும்தான் மிகவும் முக்கியமானவை. நிர்வாகம் என்பது பேடிஜமாகத் தோன்றலாம். ஆகிலும் ஸோல்ஜருக்கு அதுதான் ஜீவனடி போன்றது. நமது படை நிர்வாகத்தில் இழிவான நடவடிக்கையை எடுத்துக்கொண்டாலும் நியூகினியாவில் ஜப்பான் செய்ய ஆபாசமான நிர்வாகத்துக்கு அதை ஒப்பிடலாம். போர்முனை நஷ்டத்துடன் இறந்த இருபது பேர்களில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். ஆறுபேர்கள் பசியால் வாடி உயிர் துறந்தார்கள். 13 பேர்கள் நோய் வாய்ப்பட்டு இறந்தார்கள்.

மற்றென்று ஜப்பானியரின் வைத்திய, தேகஆரோக்கிய ஏற்பாடுகள். நம்முடன் ஒப்பிட் டால் அவைகள் அற்பமானவை. தோட்டாக்களைப்போல மனிதர்களையும் காவு கொடுக் கலாமென்று ஜப்பானியர்கள் நினைக்கிறுர்கள். இதனல் அவர்களுக்குப்போரிலும், போர் முனைக்கு வெளியிலும் ஏராளமான மனித நஷ்டம் ஏற்படுகிறது. போர்முனையில் பரிசுத்தம்

சுகாதாரத்துக்குரிய முன்னேற்பாடுகள் முதலியவற்றைப்பற்றியும் ஜப்பானியர்களுக்கு மிகவும் கேவலமான அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. ஜப்பானிய ஸோல்ஜர்கள் சுகாதாரமில்லாத முறையில் சமமாக வசிப்பதைக்கண்டு நமது ஸோல்ஜர்களுக்கு அருவருப்பு உண்டாகுகிறது. சிரமம் ஏற்படும்பொழுது, ஒழுங்குமுறை தளர்ச்சி பெறும்பொழுது இந்தக் கெடுதல் அதிகரித்து விடுகிறது. ஆகிலும் சொந்த நாட்டில் ஜப்பானியர் மிகவும் பரிசுத்த மாக இருந்து வருவார்கள்.

மூலபலம் சமாளித்து நிற்கும்பொழுது இந்த மனப்பான்மையும், திட்டமும் நன்ருக இருக்கின்றன. ஜப்பானியரிடம் இன்னும் மூலப்படை மிகுதியாக இருக்கிறது. இன்னும் 7 மிலியன் ஆட்களை அவர்கள் சேர்க்கக்கூடும். இன்னும் என்றும் நடைபெற முடியாது. உயிரை இழப்பதென்பது அவர்களின் யுத்த தந்திரத்தின் ஒரு அம்சமானதால் சமாதான காலத்தில் இந்த முறையை மாற்றி உயிர்களைக்காப்பாற்றும் முறையை ஏற்றுக்கொள்ளுவதில் ஜப்பானுக்கு அதிக சிரமம் ஏற்படும். சேனை அமைப்பிலும் கொள்கைகளிலும் விசேஷ மாறுதல்களைச் செய்வதற்கு அநேக மாதங்கள், அநேக வருடங்கள் ஆகும். யுத்தம் ஜப்பானை நெருங்க நெருங்க நம்முடைய முன்னேற்றத்தை அதிகப்படைகளைக் காவுகொடுத்தால்தான் தடைசெய்ய முடியுமென்று ஜப்பான் எண்ணக்கூடும். அந்த சமயத்தில் அவர்களின் ஆண் பலமும் குறைந்திருக்கும்.

நமது ஜெனரல்களும் போர்வீரர்களும் எதிரிகளை முறியடித்து விட்டார்கள். எந்த ஸோல் ஜரும் அவனுக்கு ஏற்பட்ட பயிற்சிக்கும், நிர்வாகப்பொறுப்புக்கும் ஒத்தவாறுதான் இருக்கக் கூடும். பஸிபிக்கிலுள்ள நேசதேசப்படைகள் ஜப்பானியரின் குணாதிசயங்களை எல்லா அம்சங் களிலும் ஆராய்ச்சி செய்து விட்டார்கள். ஜப்பானிய, ராணுவ அதிகாரிகள், போர் முனைத் தலைவர்கள் போர்படைகளின் தன்மையை அவர்கள் அறிந்து விட்டார்கள். அதன் விளைவை நீங்கள் தினசரி காண்கிறீர்கள். நமது மேன்மையான படைத்தலைவர்களும் போர் வீரர்களும் எதிரியை முறியடித்து வருகிறார்கள். இது உண்மையான விஷயம். ஜப்பானியர் களைப்பற்றி அபிப்பிராயங்களை ஆஸ்திரேலியர்கள் மறைந்துச் சொல்லுவதில்லை. அவர்கள் இதாலியர்களுக்கும் கீழானவர்கள் என்று சொல்லிவருகிறார்கள். இவ்விதமாகக் குறைத்துச் சொல்லுவதும் மிகையாகச் சொல்லுவதும் தவறாகும். அவனுடைய நிலைமை இவ்விரண்டு க்கும் மத்தியிலுள்ளது.

நமது உயர்வான, அபரிமிதமான மூஸ்தீப்புகளினால்தான் நமது முன்னேற்றம் திருப்தி கரமாக இருக்கிறதென்று தாய்நாட்டிலுள்ளவர்கள் தவறாக நினைக்கவேண்டாம். நாம் சிறந்தவர்களென்று நம்பிக்கை நமது ஸோல்ஜர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கை யுடன் உதவியாக பலமும் நல்ல அமைப்புமிருந்தால் அவர்கள் எந்தக் காரியத்தையும் சாதித்துவிடலாம். நாகரீகத்தைக் காப்பாற்ற முயற்சிக்கும் விஷயத்தில் நமது படைகள் பஸிபிக்கில் அதை தீவிரமாக நடத்திவருகின்றன. பிரமையடைந்து, அக்கித்துக்கொண்டு, அசுத்தமாக, இளைத்துப்போன ஜப்பானியக் கைதிகளைக்கண்டு இதே ஜப்பானியர்கள்தான் ஈச்வரரின் சந்ததியார்களென்றும், உயர்வான ஜாதியாரென்றும், முதலில் ஆசியாவையும் அதன்பின் உலகத்தையும் ஆள கட்டளையிடப்பட்டவர்களென்றும் சொல்லிவந்தார்களென்று நினைக்க நமக்கு ஆச்சரியமுண்டாகுகிறது. அவர்கள் நாஸிகளைவிட அதிக வெறிபிடித்தவர் கள். ஜப்பானியர்களை எதிர்த்துப்போராடுவதில் நாம் விசித்திரமான, பிரகாசமற்ற, புகழ் பெருத, ஒழுங்கற்ற ஜப்பானிய சரித்திரத்துடன் போர்புரிந்துவருகிறோம்.

## வீரத்தன்மையைவிட மூட்டாள்தனமானது.

ஜப்பானிய ஸோல்ஜர்களிடம் ஜப்பானில் ராஜீய மதசம்பந்தமான குணங்கள் காணப்படு கின்றன. சாதாரண மனிதர்களிடமும் இது காணப்படுகிறது. அவர்கள் நம்மைப்போல ஆயுதங்களை உபயோகிக்கிறார்கள். நம்மைப்போல யந்திரங்களையும் விஞ்ஞான சாஸ்திரத்தை யும் பிரயோகம் செய்கிறார்கள். பேச்சு, ராஜீயசம்பந்தமான தொடர்புகளையும் நம்மைப்போல் உபயோகித்துவருகிறார்கள். மனிதவர்க்கத்திற்குரிய பொதுப்படையான குணங்கள் அவர் களிடம் காணப்பட்ட போதிலும், அவர்களின் குணாதிசயங்களும், மனிதத்தன்மையும் நம்மைப்போல் சிலாக்கியமானவையல்ல. சில முறைகளில் மற்றொரு கிரஹத்திலிருந்து இறங்கினவர்போல் அவர்கள் காணப்படுகிறார்கள். இந்த வித்தியாசங்கள் நூற்றுக்குமேற்பட்ட அம்சங்களில் காணக்கூடும். யுத்தக் கைதிகளை எடுத்துக்கொள்ளுவோம். அமெரிக்கர்களும் ஆஸ்திரேலியர்களும் என்றும் மறவாதபடி அவர்கள் நமது ஜனங்களை கோரமாகவும், பிசாசுத்தன்மையுடனும், காட்டுமிராண்டிகளுக்கு இயற்கையான மிருகத்தன்மையுடனும்

துன்புறுத்தியிருக்கிறார்கள். அவர்களில் சிலர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அவர்கள் மறித்துபோனவர்களுக்குச் சமானம். நம்மிடமுள்ள கைதிகளை அவர்கள் மீட்டால் அவர்களைக் கொன்றுவிடுவார்கள் அல்லது கடுமையாக சிக்ஷித்துவிடுவார்கள். ஆகையினால்தான் போர்முனையிலுள்ள ஜப்பானியர்கள் உயிரை இழக்கத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் எதற்காக ஜீவித்திருக்கவேண்டும்?

போர்முனையில் உயிரை இழக்கும் இந்த நடவடிக்கையில் அநேக குழப்பமான அம்சங்களிருக்கின்றன. அதில் ஒரு பெருமையும் இல்லை. ஐரோப்பாவில் ஸ்டோன் யுகத்திலிருந்த மனிதனின் புத்திசாலித்தனத்தைக்கூட இது இழிவுபடுத்திவிடும். யுத்த தந்திர முறையில் கைவசப்படுத்தக்கூடிய ஒரு யந்திர பீரங்கிக்குமுன் கூச்சலிட்டுக்கொண்டு ஜப்பானியர்கள் தாக்கி உயிரை இழப்பதும், போரில் தோல்வி அடையுமுன் தற்கொலை செய்துகொள்ளுவதும் பிரிடிஷ் ஸோல்ஜர்களுக்கு வீரத்தன்மையற்ற முட்டாள்தனமான காரியமாகத்தான் தோன்றும். ராணுவ எதிரிகள் என்ற முறையில் ஜப்பானியரின் குணங்களை நமது ஸோல்ஜர்கள் நன்கு அறிவார்கள். ஆனால் நாகரீகத்தின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களை வெறுக்கிறார்கள். நமது ஸோல்ஜர்கள் இவ்வளவு ஆவலுடனும், வெற்றியுடனும் உயிரை இழப்பதில்லை. ஏனென்றால் வாழ்க்கையில் அவர்களுக்கு அதிக பிரயோஜனம் உண்டு. நமது நாகரீகத்தில் நம்பிக்கையும் ஆசையும் ததும்புகின்றன. ஜப்பானியப் பொதுமக்களுக்கு இந்த உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை.

## தலைவர்களிடம் விசுவாசம் குறைந்துவருகிறது.

ஜப்பானியர்களின் நாசத்திற்குள்ள அநேக காரணங்களில் அவர்கள் அமானுஷமான சக்தியுள்ளவர்களென்ற மனப்பான்மைதான் காரணம். அவ்விதத் தோற்றம் ஏற்பட்டபின் அவர்கள் அசட்டையாக இருந்து, மகத்தான வேலைகளுக்குரியதற்கு நாம் திட்டம்போடுவது போலில்லாமல் சாதாரண திட்டங்களை அவமதித்துவிடுவார்கள். இந்த முறையில் ஜப்பானியர்கள் அவர்களுக்கே ஒரு பொறியை ஏற்படுத்திவிட்டார்கள். ஐதீக பலஹீனத்தைச் சரிபடுத்த ஜப்பான் யுத்தத்தில் ஆத்மீக உணர்ச்சியை மேற்படுத்தி ஐதீக முறைகளைப் பரிகசித்து வந்தது. வெற்றிகிடைத்துவரும்பொழுது இந்த மனப்பான்மை திருப்திகரமாக வேலைசெய்யும். யுத்தப்போக்குத் தலைகீழாக மாறி, தோல்வி ஏற்பட ஆரம்பிக்கும்பொழுது, தயாரிப்புகளில் ஏற்பட்ட குறைவுபாடுகள் பலஹீனப்பட்டுவரும். நோயைப்போல வெளியே தோன்றிவிடும். சர்ப்ராக்கள் குறைந்துவிட்டாலும், அசட்டு தைரியம் திட்டத்தைக் கெடுத்துவிட்டாலும், தொழிலாளர்களிடம் அதிக வேலையை எதிர்பார்த்து அவர்கள் க்ஷீணத்தை அடைந்தாலும், அல்லது உணவுப்பொருள் சிறந்ததாக இல்லாவிட்டாலும், வைத்தியவசதிகள் குறைவாக இருந்தாலும், முஸ்தீப்புகள் போதுமான அளவு இல்லாவிட்டாலும் காலம் தப்பிவந்தாலும், மனிதர்கள் எவ்வளவு சிரமப்பட்டாலும் ஆத்மீகருணம் மட்டும் போதாது. இந்தத் துறையில்தான் ஜப்பானின் ராணுவ திட்டம் இழிவானது. மேலேசொல்லிய எல்லாவிஷயங்களும் போர்முனையில்தான் ஜப்பானின் குட்டை வெளியாக்கிவிட்டன. நமது படைகளின் தேகவலிமையையும், உயர்வான ஆகாரங்களையும், உயர்வான முஸ்தீப்புகளையும், உயர்வான பீரங்கி சக்தியையும் கண்டு ஜப்பானியர்கள் திடுக்கிட்டார்கள். முன்னணி ஸ்தலங்களிலுள்ளவர்கள் ஆகாயத்திலும், கடலிலும் ஜப்பானின் சக்தியின்மையைக்கண்டு அவர்கள் கலங்குகிறார்கள். தங்களிடமும், அவர்களின் தலைவர்களிடமும் அவர்களுக்குள்ள நம்பிக்கை குறைந்துவருகிறது.

இந்த உண்மைகளை யுத்தப் போக்கிலிருந்து நீங்கள் அறிந்துகொள்ளலாம். ஜப்பானியர்கள் எதிர்பாராதபொழுது நேசதேசப் படைகள் தாக்கிவருகின்றன. எதிரி நம்பிக்கையற்று மூர்க்கத்தனமாக உபயோகமற்ற பதில் தாக்குதலைச் செய்துவருகிறான். எதிரிக்கு ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. இவற்றிருக்குப்பின் கொஞ்சம் கொஞ்சமாக ஆகாயத்திலும், கடலிலும் ஜப்பானிய பலம் அழிந்துவருகிறது. ஜப்பானியர்களை அழிப்பது ஒரு ஆபாசமான வேலையாக இருக்கிறது. ஆகிலும் நேசதேசத்தார்கள் கொஞ்சம் கொஞ்சமாக எதிரியை ஒடுக்கிவருகிறார்கள். சமீப காலத்திய நடவடிக்கைகள் அற்புதமானவை. இன்னும் நாம் வெகுதூரம் செல்லவேண்டும். ஜப்பானின் மனித பலமும் தளவாட பலமும் முற்றிலும் அழிந்துவிடவில்லை. முக்கியமான போர்கள் இனிமேல்தான் நடைபெறவேண்டும். ஆகிலும் இறுதிவெற்றி நமக்குத்தான் என்பது நிச்சயம். ஜப்பானியர்கள் பீத்திக்கொண்டமாதிரி வாஷிங்டனிலும், கான்பெர்ராவிலும் சமாதான நிபந்தனைகள் விதிக்கப்படமாட்டாது. டோக்கியோவில் அந்த நடவடிக்கை நடந்தேறும்.

# ராயல் இந்திய விமானப்படை.

பர்மாவில் ஆகாயத்தில் அரிய செய்கைகளை நடத்தியதற்காக இந்திய விமானப்படை இனிமேல் ராயல் இந்திய விமானப்படை என்று அழைக்கப்படும். வீர கௌரவத்தினால் இந்திய விமானப்படை கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து விமானப்படையின் அந்தஸ்தை அடைந்து விட்டது. 1927-ம் வருஷத்தில் இந்திய விமானப்படையைத் தயாரிக்க வேண்டு மென்று சிபார்சு செய்த ஸ்கின் கமிட்டியின் அங்கத்தினர்களாக இருந்த பண்டிதமோதிலால் நேருவும், மிஸ்ட்டர் ஜின்னுவும், இந்திய வாலிபர்கள் தரைப்படையின் வீரத்துக்கு சமானமான ஒரு ஐதீகத்தை ஆகாயப் போரிலும், சம்பாதித்து விடுவார்களென்று கொஞ்சம் கூட எண்ணி யிருக்கவில்லை. 1932-ம் வருஷத்தில் கிரான்வெல்லில் கமிஷன்பெற்ற முதல்கோஷ்டி ஸர்க்கார் மூகர்ஜி, பூபெந்திரஸிங்க், அமார்ஜித்சிங்க், டான்டன், முதலியவர்கள் கொண்டது. 1933-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியன்று இந்திய விமானப்படை ஸ்தாபிக்கப்பட்டது. பன்னிரண்டு வருஷம் சிறப்புடன் வேலை செய்தபின் அது ஆசியாவிலுள்ள மிகவும் சக்தி வாய்ந்த படையாக மாறிவிட்டது. அதிக சக்திவாய்ந்த ஹரிக்கென் சண்டை விமானங்களையும் வல்டிவெஞ்சன்ஸ் பருந்துப்பாய்ச்சல் விமானங்களையும், ஓட்டும் இந்திய விமானிகள் ஜப்பா னியர்களின் மனதில் பீதியை உண்டு பண்ணிவிட்டார்கள். ராயல் இந்திய விமானப்படைக்கு இதைவிட பிரகாசமான எதிர்காலம் இருக்கமுடியாது. அபிவிருத்தியடைந்துவரும் இந்திய விமானப்படையின் தேவைக்குறிய நன்கு பயிற்சிபெற்ற அனுபவம்வாய்ந்த விமானிகளைத் தயாராக வைத்துக்கொள்ள எல்லா விமான முயற்சிகளும் செய்யப்பட்டிருக்கிறது. வரும் காலத்திற்குரிய விமானிகள் சாம்ராஜ்ய விமானப்பயிற்சி திட்டப்படி கனடாவுக்கு அனுப்பப் படுகிறார்கள். சென்ற வருஷத்தில் இந்திய வாலிபர்களுக்கு விமானப்படையில் அபிருசி ஏற்படுத்துவதற்காக விமானப்படை, பயிற்சிப்படை, ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி நிலயங்கள் இப்பொழுது இந்தியாவில் ஐந்து சர்வகலாசாலையில் காணப்படுகின்றன. வருங்காலத்திய அபிவிருத்திக்கு நிரந்தரமான அடிப்படையாக இருக்க 17 கைத்தொழிற் பயிற்சி, கைத்தொழிற்பயிற்சியல்லாத பள்ளிக்கூடங்கள் தேசம் பூராவிலும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. ராயல் இந்திய விமானிகளைப் பயில்வித்து அவர்களுக்கு வழிகளைக் காட் டிய பிரிடிஷ் விமானப்படைக்கு இந்தியா நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த உபயோகமுள்ள உதவி கிடைத்திராவிடில் இந்த விமானிகள் ஐரோப்பாவிலும், பர்மாவிலும் புகழ் பெற்றிருக்கமுடியாது. இப்பொழுது இந்திய விமானப்படை ஒரு புதிய யுத்தத்தை ஆரம்பிக்கப்போவதினால் அதில் வெடிகுண்டுகளை வீசும் விமானப்படையும் சேர்க்கப்படும். உலகம் ஆகாய யுகத்தை ஆரம்பிக்கப்போகும் தருவாயில் இந்தியாவின் பூகோள அமைப் பினால் அது சர்வதேச ஆகாய மார்க்கத்தில் கேந்திர ஸ்தானத்தைப் பெற்றுவிடும். ஆகாயப் போக்குவரத்து துறையில் ராயல் இந்திய விமானப்படையும் குறிப்பிடத்தக்க பங்கெடுத்துக் கொள்ளும். ஆகாயப்போரை நடத்திவரும் இந்திய விமானிகள் வருங்காலத்தில் ராக்ஷஸ போக்குவரத்து விமானங்களை ஓட்டிச்செல்லக்கூடும். "இந்திய விமானப்படை இந்தியா வின் எதிர்கால வாழ்க்கைக்கு மிகவும் மகத்தான அம்சம்" என்று வேவல்பிரபு சொன்ன வார்த்தை வியர்த்தமாகப் போய்விடாது.

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்பு களுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதி யான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## புதுக்கோட்டை மாட்சிதங்கிய மன்னர்பிரானின் கல்லூரியில் கைத் தொழில் பயிற்சி வகுப்பில் 15—3—45 தேதி அன்று காலியாக உள்ள ஸ்தானங்கள்.

எலெக்ட்ரிஷியன்கள் ... 21 பிட்டர்கள் ... 16

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 241 (5-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 24- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 25- 3-45 | நார்த்தாமலை | ... ,, | 7.00 |
| 26- 3-45 | திருமெய்யம் | ... ,, | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 |
| 27- 3-45 | புலியூர் | ... ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |
| 28- 3-45 | அன்னவாசல் | ... மாலை | 7.00 |
| ,, | கீழக்குரிச்சி | ... ,, | 7.30 |
| 29- 3-45 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |
| 30- 3-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 242 (6 வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 31- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 1- 4-45 | கீரனூர் | ... ,, | 7.00 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 |
| 2- 4-45 | பெருங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 |
| 3- 4-45 | குடுமியாமலை | ... ,, | 7.00 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 |
| 4- 4-45 | மலையடிப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | இள்ளுகோட்டை | ... ,, | 7.30 |
| 5- 4-45 | அரிமளம் | ... ,, | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 6- 4-45 | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 24— 3—45 | திருமெய்யம். |
| 25— 3—45 | ஏம்பல். |
| 27— 3—45 | குடுமியாமலை. |
| 29— 3—45 | ஆலங்குடி. |
| 30— 3—45 | புதுக்கோட்டை. |
| 31— 3—45 | வெட்டன்விடுதி. |
| 1— 4—45 | விராச்சிலை. |
| 3— 4—45 | பேராம்பூர். |
| 4— 4—45 | கரம்பக்குடி. |
| 5— 4—45 | கீழாநிலை. |
| 6— 4—45 | நார்த்தாமலை. |

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—26-3-45.